363


363/2-53

உ ஸ்ரீராமஜெயம்.

இராமாவதாரமென்னும்.

# மாயாவதாரன்

வர்ணிப்பு.



மதுரை செல்லத்தம்மன் கோவில்தெரு

K. P. கருப்பையாக்கோன் என்ற வரதராஜராமானுஜன்

அவர்கள் கேட்டுக்கொண்டபடி,

மதுரை புதுமண்டபம் புத்தகசாலை,

G. இராமசாமிக்கோன்

...னால் அச்சிடப்பட்டது.

1953 (0—4—0

N53
10215

உ

ஸ்ரீராமஜெயம்.



ஜகத்சர்வம் விஷ்ணுமயம்.

## இராமாவதார மென்னும்

# மாயாவதாரன் வர்ணிப்பு

சீர்பூத்தமெய்யன் ஆதிமகாமூலம் ஜெகம்பூத்தோன் பைந்துளபன்
தார்பூத்தமாயன் வைகுந்தநாதன் றனைவருந்தி யானழைக்க
அந்திமதியைத்தரித்த அரனுமையாளீன்ற யானைமுகன்முன்வருக
மந்திரசடாச்சரவேல் மாவூற்றுமேவும் வள்ளசித்தர் முன்வருக
நிலமளந்தோன் மார்பிடத்தில் அனேகநெடுங்காலம் நீங்காமல்வாழுகின்ற
மலர்மடந்தைதன்னிருதாள் அடியேனுடைய வண்ணமுடிமேற்புனைவேன்
செங்கலர் செந்தாமரைக்கை கொண்டகோ தண்டவில்வாள்
சங்கினொடு சக்கரமுங் காயாம்புமேனி தண்டுந் துணையாமே
நீள்வானளந்தோன் பூமிமுழுதாண்ட நிமலன்கதை யான்வருந்த
ஆள்வார் பதின்மர் துணை கற்றோர்கள்தன்பாதம் அனுதினமும் யான்மறவேன்
சேயாரும்விண்ணுலகில் ஒருகொடியிலேதான் சென்றமுதங் கொண்டுவந்து
தாயார்மனமகிழ அதிகவிரைவிற் றருங்கெருடன் ருள்மறவேன்

### இரணியன் வரலாறு.

முந்திகிரேதாயுகத்தில் இரணியாசூரன் முறையாய்த் தவம்புரிந்து
தந்திரமாயீசனிடம் யீரேழுலோகந் தானுளவேணுமென்று
அந்தியிலுஞ்சந்தியிலும் ஆயுதங்களாலும் அண்டர்முனிவோராலும்
எந்தவிதப்போரினாலும் எமதன்மனனாலும் எப்பவுஞ்சாவில்லாமல்
சந்ததமுமீசனிடம் இரணியாசூரன் தக்கவரம்பெற்றதினால்
விந்தைசேர் பூவுலகில் இரணியநமாவென்று மேதினியோர் தான்துதிக்க

ஹரிஓமென்றட்சரத்தைக் கத்துகடல்சூழவனியுள்ளோர் சொல்லாமல்
நெறிமுறைமைதான்பிசகி இரணியநமாவென்று நீனிலமெல்லாந்துலங்க
அழியாவரம்வாங்கி யாளுகின்றநாளில் அமைச்சர்களைத் தானழைத்து
வழியுடனென் பெயரதனை நினையாதவரை மண்ணுவிண்ணுஞ் சோதியென்ருர்
மந்திரிசோதிப்பளவில் ஹரிநமாவென்றதுதி வரவில்லைமூவுலகும்
செந்திருமால் தானறிந்து சக்கரத்தைப்பார்த்து செப்புவாரோர் வசனம்
நித்தியவாழ்வுற்றவனே இரணியன்றேவி லீலாவதிவயிற்றில்
புத்திரன்போற்பிறப்பாய் பின்னாலேநான்வருவேன் போக்குவேன் சூனுயிர்
நடவென்றுரைத்திடவே லீலாவதியென்னும் நங்கைகற்பத்தையடைந்து
திடமுடனே சூழ்வளர்ந்து மாதமொருபத்து சென்றவளும் பெற்றிடவே
சொல்லவந்தமாற்ருனை அன்னையுந்தந்தையுங் குழந்தையெனவேவளர்த்து
செல்வனுக்கைந்தாம்வயதில் பிரகலாதேவரென்றே தேசமெய்க்க நாமமிட்டு
ஏழாம்வயதினிலே பள்ளிக்கு இடஞ்சல்வந்தவாறு சொல்வேன்
தாழாதவித்தையுள்ளோன் சுக்கிராச்சாரிதன்னைத் தானழைத்து மாசூரன்
இரணியநமாவெனவே ஓதிவையுமென்றே இராஜனுரைத்திடவே
திறமுடனேட்டைக்கொடுத்து அப்படியே சிறுவனுக்கே ஓதிவைத்தார்
ஓதிவைத்தவாத்தியிடம் ஹரிஓ நமாவென் ருேர்மனதாயுரைத்தான்
வாதுவந்ததென்றறிந்து சுக்கிராச்சாரி மனக்கண்ணாலே தெரிந்து
கண்டறிவோ ரின்னமென்று கோபமாய்வைது கடுந்துரைத்தான் முன்போலே
வண்டனுடதன்பெயரை சொல்வதில்லைபோம்போம் வாத்தியில்லை நீயெனக்கு
அண்டரெல்லாங் கொண்டாடும் ஆதிமூலப்பொருளாய் ஆயர்குலக் கொழுந்தாய்
கொண்டல்வண்ணனுகவுரு சிந்தையிலென்னாளுங் கொண்டநெடுமால்திருமால்
அவர்பெயர்சொல்லாதவற்கு எங்கள்குருவே அருநரகமேகிடைக்கும்
பவமுடையோனென் தகப்ப னவன் றன்பெயரை பகர்வேனே போவெனவே
மற்றுமுள்ளபாலகர்க்கு ஹரியென்றசொல்லை வாத்திபோ லோதலுற்ருன்
கற்றவஞ்சேர் சுக்கிரனும் பிரம்பாலடித்து நடுக்கமுறப்பற்கடித்து
கிரும்போசிறுபயலே இரணியநமாவென்று கீர்த்தியைச்சொல்லெனவே
இருகாதுமூடியங்கே ஹரிகரியென்றவனும் ஏகாந்தமாய்மொழிய
கையைப்பிடித்திழுத்துக் காதைத்திருகித் காதலன்முன்னே விடுத்து
வையமெல்லாம் ஆளுமன்ன இரணியநமாவென்று மைந்தனுக்கே ஓதிவைக்க
அந்தவுரைசொல்லாமல் ஹரிஓம்நமாவென்றே அஞ்சாமற்சொல்லுகிருன்
எந்தனை எட்டாலடித்து நினைத்தபடிவைது இடித்தானே கன்னமதில்
தன்பாலனென்றிருக்க இவ்விதமாய்வந்த சங்கதியைத்தானறிந்து
உன்பாடவன்பாடென் றிந்தாருமென்றே ஒப்பிவைத்தான் தந்தையிடம்
அரியென்றுகாதல்விழ சிங்கேறுபோலே ஆக்ரமித்துக்கண்சிவந்து
சரியோடா இவ்வார்த்தையென்றனக்குமுன்னே சாற்ருதே கண்மணியே

குருவைப்பகைப்பர்களோ இரணியநமாவென்று கூறுடாமுன்னே யென்றான்
கருவையறுக்கவந்த பிரகலாதேவன் திருவையரியென்றுரைத்தான்
திருவையரியென்றவுடன் இரணியாசூரன் சீறிச்சினந்தெழுந்து
இருகண்பொரிபறக்க பாலகனையப்போ யெத்தினான் காலாலே
மல்லர்தனையழைத்துக் கட்டிச்சுருட்டி மாமலைமேல் வைத்துருட்டி
கொல்லுங்களென்றுரைக்க தூதர்பிடித்து குழந்தைதனை கட்டலுற்றார்
சிந்தைமிகவேமகிழ்ந்து ஹரிஓம்நமாவென்றே செப்பினான் ஞானமதாய்
சுந்தரத்தாதியர்கள் அவன்தாயிடத்தினிலே சொல்லஅவளோடிவந்து
முட்டிவிழுந்தழுது அரசன்சபையேறி முன்புமனம் வெம்பியவள்
கட்டிக்கரும்பேயினி உங்களையாவுடைய கருத்தைப்போற்செப்பெனவே
பெற்றவளைத்தான்சினந்து அழுகின்றமூடப் பேய்பேரை சொல்வேனோ
கற்றறியாத் துரோகிதனை என்னுடையதாயே கனவிலுந்தா னெண்ணுவேனோ
பேதைக்கரிவேது நில்லாதேயென்று பிரகலாதவனுரைக்க
தூதரிடம்சேதிசொல்லி அரசனனுப்பச் சுதனையவர் கொண்டேக
பரிமாமலையில்வைத்துக் கட்டினகட்டோடே பதறியுருட்டலுற்றார்
ஹரிஓம்ஹரிகரியே என்னையிப்போது ஆதரிப்பாயென்றுரைக்க
மெத்தைதனிலேயுருண்டு பிரகலாதேவன் விளையாண்டவன்போலே
தத்திவிழுந்துருண்டு பாலனுடமேனியிலே தழும்பொன்றுமில்லாமல்
மலையடிவாரந்தனிலே கேசவனைப்போற்றி வாடாமலேயிருக்க
நிலைகலங்கியேதூதர் அரசன்முன்சென்று நிகழ்த்தினார் மெய்நடுங்கி
அக்கணம்பாம்பாட்டிகளை வாவென்றழைத்து அரவத்தாற் கொல்லுமென்றான்
உக்கிரமச்சர்ப்பமதைப் பாலன்மேலேவ ஓங்கிப்படம்விரித்து
சீறியேகொத்திடவே சேஷசயனாவென்று செப்பினான் மெய்மகிழ்வாய்
சீறிவந்தபாம்பனைத்தும் சிறுவன்றனைக்கண்டு திருத்தாளடிபணிய
கொத்தவந்தநாகமெல்லாம் பாலகனைச்சுத்திக் குடைபிடித்துத் தான்திரும்ப
சித்தரவம்கொண்டுவந்த பாம்புப்பிடாரர் சென்றார்கள் ராசனிடம்
செப்பவிரணியனும் அமைச்சரிடம் செந்தணலிற் போடுமென்றான்
அப்போதமைச்சர்களும் அனேகவசுரருடன் அடங்காததீவளர்த்து
தூக்கியேபோடெனவே அந்தப்படிக்குத் துரிதமாயக்கினியில்
சேர்க்கைபலநெய்க்குடங்கள் விட்டுச்சிறுவனைப் போட்டாரேயக்கினியில்
அக்கினிக்குள்ளேசிறுவன் அரிகரியென்றே அருவிதனில் நீந்துதல்போல்
திக்கிலுள்ளோர்கொண்டாட அக்கினியில்மூழ்கிச்சிறுவன்விளையாடிடவே
மோசம்வருமென்றறிந்து மந்திரிமாரஞ்சி முறையிட்டார் வேந்தனிடம்
நாசம்வருமென்றதனை யிரணியாசூரன் நாடியதைப்பாராமல்
செக்கில்போட்டாட்டெனவே பாலகனைத்தூக்கி சீக்கிரத்திலேகொடுபோய்
உக்கிரக்கல்செக்கதனில் இருப்புலக்கைநாட்டி யுரத்துடனங்காட்டலுற்றார்

புத்தியுடன்வாய்திறந்து புண்ணியருடோத்மன் பூரணனேயென்றியம்ப
வெத்தியுள்ளசெக்கொடிந்து இரண்டாய்விழுக வேந்தனதுகேட்டவுடன்
திக்கெட்டில்வாழும் யானைதனையழைத்துச் சிறுவனைக்கொல்லுமென்றான்
திக்கயங்களெல்லாம் மும்மதங்கொண்டே சிறுவன்மேற்சீறிவர
பாலனதுகண்டு ஆதிமகாமூலமென்றே பாங்காயுரைத்திடவே
மூலமென்றஅட்சரம் கேட்டவுடன் யானைகளும் முடிவணங்கித்தெண்டனிட்டு
அயர்ந்துமிரண்டோட அங்குவந்தோரெல்லாம் ஆச்சரியமீதெனவே
பயந்தேபகர்ந்திடவே இரணியனுமப்போ பட்டாவைத்தானோக்கி
அடங்காதகோபமுடன் கிட்டநெருங்கி அதட்டியே நிஷ்டூரன்
துடங்காதவார்த்தையென்ன அவனைநீ சொல்லடா கொல்வேனென்றான்
பேருமவன்ஊருமவன் எந்தெந்தநாளும் பெண்ணுமவன் ஆணுமவன்
நேரும்பலவுயிர்க்கும் எள்ளுக்குளென்னைபோல் நீங்காமலேநிறைந்தோன்
அரியைப்பகைத்தவர்கள் இவ்வுலகமீதில் அழியாமலேன்பிழைப்பார்
அரியறிந்தால்நீபிழைப்பாய் அறியாதேபோனால்மாண்டிடுவாய் சொன்னோன்
என்றுசொல்லவாழோங்கி எண்டாபயலே அவனிருக்குமிடஞ் சொல்லெனவே
நின்றுசிங்கப்பற்கடித்து நெருங்கியவன்கேட்க நீதிசொல்வான் தந்தையர்க்கு
வானுலகும்பூமியிலும் அங்குமிங்குமெங்குநிறை வைகுந்தமூர்த்தியிவர்
தூணிலுமிங்கேயிருப்பார் இந்தச்சிறிய துரும்பிலும் வந்தேவுதிப்பார்
வணங்குவோர்காண்பதல்லால் துதியாமூடர் வைகுந்தஞ்சேர்வதில்லை
மணங்கமழுபூந்துளபன் நின்மலசொரூபன் மாதவனேதெய்வமென்றான்
இந்தக்கற்றூணதிலே இருப்பவனோவென் றெழுந்தோங்கியே யறைந்தான்
அத்தூண்தான்வெடிக்க நரசிங்கமூர்த்தி அதிலிருந்து வஞ்சகமாய்
கண்டவர்கள்மெய்நடுங்க இரணியாசூர [illegible] கால்வாரிக் கீழ்போட்டு
மண்டியகோபத்துடனே மாலைநேரத்தில் வாசற்படிதனிலே
கைநகத்தினாலவனைக் குடலைப்பிடுங்கிக் காலனுயிர் போக்கியபின்
கைகுவித்துப்பாலகனும் நரசிங்கமூர்த்தியைக் கண்டவுடன்தெண்டனிட்டு
கோபாலன்சொற்படியே சக்கரமுஞ்சொந்தக்குழந்தையென வந்துதித்து
மாபாவியையவதைத்துத் தாயார்க்குநல்ல வாக்குரைத்து மாயமதாய்
நாவாற்றுதிப்பவர்க்கும் ஆ [illegible] மூ[illegible]தை நாடுகின்றதொண்டருக்கும்
தேவாதிதேவர்கட்கும் வைகுந்தச் செங்கண்திருமால்தனக்கும்
கருணைத்திருவுருவே எனையாண்டசுவாமி காயாம்புமேனியனே
தருணந்தருணமிது கோவிந்தமூர்த்தியைச் சரணஞ்செய்தேனடியேன்

## இராமர் வரலாறு.

திரேதாயுகந்தனிலே கவுசலாதேவி செல்வனென வந்துதித்து
கார்போலுருவெடுத்தே உயிர்துணையாய்வந்த லட்சுமணன்றன்னோடு

சென்றுகோசிகமுனிவன் சொற்படியேயன்று சீரணியிற்றாடகையை
வென்றுகல்லைபெண்ணாக்கி காயாம்புவண்ணரீ மிதிலையிலே வில்லொடித்து
திருவைமணமுடித்துத் தசரதனைக்கூடத் தேரில்வைத்துச்சேனையொடு
வரும்வழியில்முன்பழிக்குப் பரசுராமன்வந்து வாதாடித்தோற்றோட
சையோகமாகவேதான் வையமெல்லாங் கைகுவிக்கச் சதுரங்கசேனையோடு
அய்யோத்திதனில்வந்து மகுடமுடிசூட்டி அரசுசெய்யவேணுமென்று
வையகத்தோர் போற்றிசிறக்க யோகீஸ்பரரும் வசிஷ்டரும்மேலாயிருக்கச்
செய்தகொடுமையிது கைகேசியங்கே தசரதனைத்தானழைத்து
பண்டிரண்டுபெற்றவரம் இராமன்காடாள பரதன்நாடாளவென்று
கண்டிப்பாயாளனுப்பச்சுவாமியதைக்கேட்டுக் கருத்திலதிபூரணமாய்
ராட்சதரைவேட்டைசெய்ய நாள்வந்ததென்று லட்சுமணற்குண்மைசொல்ல
ஆச்சியெனுஞ்சீதையரை கூடவேகூட்டி ஆரணியஞ்சென்றிடவே
தாயார்மதிமயங்க ஆதிரகுராமர் தகப்பனுயிர்மடிய
ஓயாக்கவலையதாய்ப் பட்டணத்திலுள்ளோ ரோடிவரக்காடடைந்து
மரவுரிகள்தான்தரித்துக் குகனையடுத்து மாறாச்சிநேகமுற்று
திரமாமலைவளம்பார் சித்திரக்கூடமெனச் சீதைக்குக்காட்டியபின்
கும்பமுனியைப்பணிந்து ஆதிரெகுராமர் கோதண்டமும்வாங்கி
அம்புற்றுஎம்பெருமாள் பஞ்சவடிதீர்த்தம் அமர்ந்துபர்ணசாலைகட்டி
இளையோனைக்காவல்வைத்து காயாம்புமேனி இருக்குந்தருவாயில்
பழிகாரிசூர்ப்பநகை இலங்கைநகர்தன்னைப்பாழாக்கியேயழிக்க
தன்னுருவைமாற்றியவள் தெய்வரம்பைபோலே சார்ந்தாளேசாமியிடம்
கன்னியிவள்மையல்கொண்டு கண்ணால்மருட்டி கலியாணஞ் செய்யவென்றால்
சீதைமணவாளன் ராட்சசியென்றேயறிந்து செப்புவாரோர்வசனம்
பேதையரேசொல்வேன்கேள் எந்தனுக்கிப்போது பெண்ணொன்றிருக்கிறது
தம்பியர்க்குத்தாரமில்லை போவென்றனுப்பித் தானெழுதினான் முதுகில்
வம்பியிவள்வாரதினால் ஆக்கினைகள்செய்து வனத்திற்றுரத்தெனவே
தாவியவளோடிவந்து முதுகிலெழுதினதைத் தான்காட்டிச்சேருமென்றாள்
மேவியவளைப்பிடித்து மூக்குமுலைகாதை மெய்யாகவேயறுத்து
போடிவெளியேதியென்று இளையபெருமான் பொடுபொடுத்தேவிரட்ட
வாடியவளழுது கரனிடம்போய்ச்சொல்ல வந்தான் படையெடுத்து
எட்டுலட்சம்சேனைகளைக் காயாம்புமேனி எதிர்த்துநின்று தூளாக்கித்
திட்டமரியாக்கரனை கரதூஷணனை திரிசிராளையும்வதைக்க
கண்டாள்இலங்கை சென்றாள் ராவணன்சபையிற கதறிநான்சாவேனென்றாள்
விண்டாள்விபரமெல்லா விராட்சதனுமப்போ மெலிந்தான்பெண மோகமதாய்
மாமன்மாரீசனையும் வரவழைத்தேயங்கு மானாகச்செல்லுமென்றான்
ஆமெனவேமாரீசன் மானுருவங்கொண்டே சீதையிடத்தேவருக

மாதாவாஞ்சீதைகண்டு வைத்துவிளையாட மான்வேணுமென்றுசொல்ல
சூதாம்பொய்மானெனவே இளையபெருமாள் சொல்லியுங்கேளாமல்
தம்பிபதனமெனப் பொன்மானுந்தாவித் தானோடப்பின்தொடர்ந்தே
வெம்பிவிடாமற்றுறத்தக் கண்டந்தமானும் வெகுதூரமோடிவிட
சூதையறிந்தவருங் கோதண்டம்பூட்டி தொடுக்கவம்பு பட்டுருவச்
சீதைக்கபயமென்று செத்தவுடன் சத்தம்செவிகேட்க லட்சுமணன்
மங்கைசொன்னசூதினால் கோட்டைக்கிழித்து மனக்கவலையாய்நடக்க
பொங்குமுள்ளராவணனும் ஒளிவைத்திருந்து புண்ய சந்நியாசியைப்போல்
ஆச்சியிடத்தில்வர லட்சுமணன்கோடு அக்கினியாய்ச் சூழ்ந்துசுட
வாய்ச்சம்ரதாயமுடன் இராவணசந்நியாசி மாபிக்ஷாந்தேகியென்றான்
வஞ்சமற்றஜானகியாள் கனிவர்க்கமேயெடுத்து வாசற்படியில்வர
அஞ்சாமல்ராவணனும் நிலத்தோடேபேர்த்து அன்னையரைத்தோளில் வைத்து
ஏகினான்வேகமுடன் சடாயுகண்டு எதிர்த்தவன்மேல் சண்டைசெய்ய
சாகின்றகாலமதால் உயிர்நிலையைச்சொல்லத் தரித்தானிலங்கைசென்றான்
தம்பியுடன்ராமனுமே பர்ணசாலையைப்பார்க்கத் தையல்தனைக்காணாமல்
வெம்பிநெடுங்கானம் இருபேருந்தேடி வெந்துமனம் நொந்துருகி
வரும்வழியிலேவனத்தில் சடாயுவைக்கண்டு வகைவிபரந்தான்கேட்டு
கருமந்தனைமுடித்து ஆரணியஞ்செல்லக் கவந்தன்றனைவதைத்து
சவரியைக்கண்டமுதுகொண்டு அனுமானுறவுதான்பிடித்தே உண்மைசெப்பி
கவலையறச்சுக்ரீவன் எழுபதுவெள்ளஞ்சேனை கைவசமாய்க் கொண்டபின்பு
விந்தைமராமரமேழும் ஊடுருவவங்கே வில்வளைத்து அம்புதொட்டு
துந்துமிதன்யெலும்பைத் தம்பியின்காலாலே தூக்கியெறியச்சொல்லி
வாலியுயிர்போக்கிக் கிஷ்கிந்தாமலையில் வந்திருந்து தூதனுப்ப
வேளைநல்லவேளையவன் அஞ்சனாதேவிமகன் விஸ்வவுருவங்கொண்டே
பாய்ந்தானனுமானும் மயேந்திரகிரிமேலேறிப் பாயமத்தியிற்றாரை
வாய்ந்தஅரக்கிகுடல் பிடுங்கித்தலங்குலுங்க வந்திலங்கைமுன்குதித்தான்
வடவாசற்காவலவள் இலங்கணியாளென்னும்வல்லரக்கிவந்தெதிர்த்தாள்
கெடராவணன்படைக்கு முகூர்த்தம் முதற்பலியாய்க்கிட்டினாளென்று சொல்லி
அதட்டுமிலங்கணியைக் கன்னந்திரும்ப அரைந்தான்மடிந்திடவே
பதட்டமில்லாதேயனுமான் இலங்காபுரிசுற்றிப் பார்க்கத்தருணமென்று
எழுநூறுயோசனையாம் இந்தஇலங்கைநகர் எங்கெங்கும் போய்ப்பார்த்தோம்
வழுநூறுசெய்யும் பொல்லாவரக்கருட மாடகூடஞ்சோலை
குளிகையும்மாளிகையும் இடுக்குமுடுக்குகளுஞ் சுற்றியெங்குந்தேடினமே
யாளிசிங்கம்வாழுகின்ற அடர்ந்தவனமெல்லாம் அலைந்துதிரிந்தோமே
பாராஇடமிலையே என்தாயையின்னம் பார்ப்பதினியெக்காலம்
நீதநெஞ்சுக்குத்தெய்வமே உன் துணையாம் செய்யும்வகையானறியேன்

என்றுபுலம்பி கோவிழந்தகுருடனென நின்றானேமுன்னாலே
நன்றுகண்டான்தாவி அசோகவனம் நாடியோர் மரத்திருந்து
சீதையம்மனைக்கண்டு அனுமானகமகிழ சேவைமிகக்கொண்டு
சூதாயரக்கியர்க்குத் தூக்கம்வரச்செய்து சுற்றிவந்தடிபணிந்து
போற்றிகணையாழிதந்து அம்மனிடமனுமார் பொற்சூடாமணிவாங்கித்
தேற்றியேஜானகியை அசோகவனத்தை சீக்கிரத்திலே யழித்து
அங்கிருந்த கிங்கிலியர் எண்பதினாயிரவரையும் அடியோடேசாய்த்துவிட்டு
தங்காதெழுந்திடவே எதித்தோடிமுன்வந்த சாம்புமாலியைவதைத்து
தோரணகம்பத்திருந்தே பஞ்சசேனாதிபரை தொலைத்தானொருநொடியில்
ஆரவாரத்துடனே வந்தனுமனோடெதிர்த்த அட்சுதனும் பட்சணமாய்
விருந்தரக்கர் சேனையெல்லாம் எமதர்மராஜனுக்கு விருப்பாயருந்தெனவே
இருப்புத்தடியாலடித்து அறுபதுவெள்ளப்படையும் எமனூர்க் கேகவைத்தான்
எதிராடிப்போர்புரிய சம்பிரதாயம்பேசி யிந்திரசித்துவந்திடவே
குதிகொண்டஎமனைப்போல் கையிருப்புலக்கை கொண்டிங்குசாடினனே
திரமாயனுமானும் வந்தாற்பதுவெள்ளஞ் சேனைகளை மாய்த்திடவே
பிரமாஸ்திரத்தாலே இந்திரசித்தாலனுமான் பின்கட்டாய்க் கட்டியபின்
தந்தையிருக்குஞ் சபையில்கொண் டனுமானைத் தான்முன்னிருத்திடவே
விந்தைசிங்கா சனம்போல் வாலைவளைத்து வீற்றிருந்தார்மேலாக
இந்தஅதிசயத்தை இராஜசபையி லெல்லோரும் பார்த்திருக்க
மந்தமதிராவணனும் குரங்கேயிலங்கைக்கு வந்ததென்ன சொல்லெனவே
நான்தானடாபயலே என்பேரனுமான் ஸ்ரீராமனுக்குத்தூதனடா
ஏன்கெட்டுப்போகிறைநீ எங்கள்ஜானகிதனை யிப்போதேவிட்டுவிடு
என்றுபலவிதமாய் ஞாயவழியெல்லாம் எடுத்தெடுத்தோதிடவே
நன்றறிந்தநீதிமொழி குரங்கேநீயென்றனுக்கு நவின்றாய்வெகுநேர்த்தி
என்றானிராவணனும் விழியிற்பொறிபறக்க எழுந்தான் கைவாளுருவி
நின்றானைக்கண்டு தம்பிவிபூஷணனும் நிகழ்த்துவானோர்வசனம்
தூதனென்றுவந்தவனை வாளெடுத்துக்கொள்ள துணிந்தேயெழுந்தாய்நீ
பாதகமாம் அண்ணேன் மெத்தஇகழ்ச்சியென்று பணிந்துவிலக்கிடவே
குரங்கினுடவாலதனில் எண்ணைத்துணிசுற்றி கொளுத்துவாய் தீயெனவே
இரங்கினாரக்கனென்ன எல்லோருமங்கே எழுந்துசபைகலைந்தார்
இந்திரசித்தனுமே அனுமானுடவா ண்ணைத்துணியதனால்
பந்தம்போற் சுற்றியதில் நெருப்பைவரவழைத்துப் பாவிமகன்வைத்தானே
சீதையிதையறிந்து பொன்பொறிபோலேயிருக்கச் செய்வாயனுமானும்
வாதைப்படாதிருக்க அக்கினிபகவானை வருந்தித்துதித்திடவே
அந்தச்சமயத்தில் அடங்கிப்பயந்து அக்கினியும்பற்றிடவே
இந்தச்சமயம் நல்லதென்றே மனமகிழ்ந்து இலங்கைநகர்தனில்

வாலைவளர்த்துவிட்டு சாலையோடுசோலையதில்வைத்தான்பெருநெருப்பை
மூலைக்குமூலையங்கே மாடகூடந்தகர்ந்து முடிசாய்திடிந்துவிழ
பட்டணத்தைசுற்றி அரக்கரோடாதபடி பாதைமறித்தநுமார்
இட்டவனல்பற்றிப் படுக்கைவீடெல்லாம் எங்கும் எரிந்துவிழ
அநேகஅரக்கியாகள் கைக்குழந்தையைப்போட்டு அடவிதனைச்சேர்ந்தார்
சிநேகந்தனைமறந்து ஒருவர்க்கொருவர்புகைச் சிக்கினிலேமுட்டிடுவார்
வீட்டின்மேல்வீடுகளும் நிலத்தோடேசாய்ந்து வெட்டவெளியாச்சுதங்கே
காட்டிக்கொடாதேயென்று வேலைக்குழோடிவிழ கண்மூடிச்செல்வர்சிலர்
இலங்காபுரியதனை யிந்தவிதஞ்சுட்டுவிட்டு எழுகடலுந்தாண்டி
கலங்காதநுமானும் ஸ்ரீராமராகவனைக் கண்டவுடன்தெண்டனிட்டு
அண்டருங்காணாதவொரு இலங்காபுரியதனில் அன்னைஜானகியைக்
கண்டேன்சூடாமணியைமாதா அடையாளங்கைக்கொண்டேன்பாருமென
தந்தானனுமானுஞ் சூடாமணியைத் தந்தவுடன் வந்தசுகம்
எந்தாய்ஜானகியரும் தற்சொரூபமாயங்கு எழுந்தருளிவந்ததொப்பாய்
அகமும்முகமலர்ந்தே இருதோளும்பூரிக்க ஆனந்தமாகவேதான்
சுகமாஞ்சுக்ரீவனேநீ வானரவீரர்க்குச் சொல்லுவாயிக்கணமே
என்றவுத்தாரமதை சிரமேலணிந்தேனென வெண்ணியேபக்கமதில்
நின்றசேனைத்தலைவர் யாவருக்கும் நிகழ்த்தினானோர் வசனம்
கண்டார்கவிபடைகள் நமக்குநல்ல காலமெனவேமகிழ்ந்து
கொண்டாரவரவரும் எழுபதுவெள்ளஞ்சேனை கூடியேஓர்முகமாய்
அரண்டாரரக்கரென கொண்டானடித்து ஆடலொடுபேசியங்கு
திரண்டுவரக்கண்டாரே ஸ்ரீராமமூர்த்தி சிந்தைகழிகொண்டாரே
மனமகிழ்ந்துதேதி தெற்குகடற்கரையை வந்தவருங்கண்டாரே
முனமறியாவிபீஷணனும்சரணஞ்சரணமென்றேமுடிவணங்கித்தெண்டனிட்டு
கண்டுகருணையொடுகோவிந்தமூர்த்தி களறுவாரோர்வசனம்
உண்டுகதிர்மதிகளுள்ளளவும்பட்டம் உனக்கேசிரஞ்சீவி
என்றுவலக்கைகொடுத்து மயங்காதேயெந்நாளும் யீந்தோமிலங்கைநகர்
சென்றுவருவோமெனவே ரகுப்தமூர்த்தி செப்பவவனெப்பிடவே
தென்கடலைத்தாண்டவென்று வருணமந்திரமதனை செபித்துமொருவாரம்
நன்கறியாதேயிருந்தான் யென்செய்வோம்தம்பி லட்சுமணாவென்றுரைத்து
கோதண்டமேவளைத்து பாணந்தொடுத்து குணத்தொனிசெய்தே விடுத்தார்
தீதண்டவேவிரிந்த கடல்நீர்மலைகளெல்லாம் தீய்ந்துகரியாய்க்கருக
அக்கினிவேதனையால் வருணன் துடிதுடித்து ஆத்திரமாயோடிவந்து
நிக்கினியாரையாலே தெரியாதபத்தியினாற் செய்தபிழைபொறுப்பாய்
என்றேநமஸ்கரித்தா ஆதிரகுராமர் இணையடியைப்போற்றிசெய்து
சென்றேமுதுகினிலே வானரரேநீங்கள் சேதுகட்டுமென்றுசொல்ல

கந்தமாதனன் குமுந்தன்கைந்தனிதைக் கழறவனுமானிடத்தில்
வந்தான்வலாரிமகன் துமிந்தன்ததிமுகனும் வசந்தன்முதலோர்கூடி

அந்தமலையேயுனக்கு இந்தமலையேயெனக்கென் றுரவாரத்துடனே
சொந்தம்பாராட்டியல்லோ வேரோடுமலைபிடுங்கித் தூக்கியெறிந்தார்கள்

அடுத்தமலையவர்க்கு அடுத்தமலையிவர்க்கின் றுகாதென்றேசிலர்க்குள்
சடுத்தம்மிகப்பேசி ஒருவர்க்கொருவர் தானெடுத்து வீசுவர்கள்

சக்கரம்போல் சுற்றிவரும் மலைகள்தனைப்பிடித்து தக்கபடிவைத்தல்லோ
இக்கிலுள்ளோர்கொண்டாட சிறந்தநளனொருவன் திருவணையைக்கட்டினரே

சேதுபந்தனஞ்செய்தே எழுபதுவெள்ளஞ் சேனைகளையுங் கூட்டி
மாதுசிறைமீட்டவென்று சுவேலமலைமீதில் வந்திருக்கும்வேளையிலே

மந்தமதிராவணனும் தளமீதுமேயறிய வந்தசுகசாரணரை
தந்தாய்விபூஷணனும் கண்டுபிடித்துக்கட்டிச் சாமியிடங்கொண்டுவர

வெல்லவும்மாலாகாது கொண்டுவந்துசீதைதனை விட்டுவிடுமென்றலவோ
நல்லசுகசாரணரே சொன்னார்ஸ்ரீராமனென்று ராவணர்க்குச் சொல்வீரே

நீதிபலபலவாய் நல்லசுகசாரணரே நீங்கள்போய் வேந்தனிடம்
ஓதிவழியனுப்பத் தப்பிப்பிழைத்தோமென் றோடிலங்கையுட்புகுந்தே

உத்தரகோபுரத்திருந்தே லங்கையரசனிடம் ஓடிவந்துசாரணர்கள்
சுத்தஞ்சுவேலமலை யதனிலிருப்பவரைச் சுற்றிநாம்பார்த்துவந்தோம்

நீலமலைபோலே சுவேலமலைமேலே நிற்கிறவரைப்பாரும்
பாலகனென்றெண்ணாதே ஸ்ரீராமமூர்த்தி பண்டுவகையுண்டருள்வோன்

துடுக்கனந்தலட்சுமணன் சூர்ப்பநகைதன்னைத் தொங்கிசப்படுத்தினவன்
இடுக்கிலேநிற்கிறவன் நம்மைநாசஞ்செய்ய இலங்கையைவிட்டுப்போயினவன்

மூந்தக்கடல்கடைந்த வாலிமகன்பொல்லா மூர்க்கனவனங்குதன்காண்
இந்தப்பெருவணையைக் கட்டினவனோநளனும் இவனோகுமுதன்காண்

அடுத்தேயிருக்கிறவன் சுக்ரீவனாமிவனும் ஆதித்தனுக்குதித்தோன்
ஒடுக்கிக்குரங்குக்குள்ளே குரங்காகுமேயிந்த ஊரைக்கரியாக்கினவன்

உன்றன்பலத்தினுக்கு வானரப்பூச்சிக்கூட்டம் ஒட்டம்பிடித்திடுமே
என்றுபலபேர்களையும் சுகசாரணர்கள் எதிர்நின்றுகாட்டிடவே

மனதுட்பொறுமைகொண்டு லங்காபுரியரசன் வடகோபுரமதனில்
சினமோடிருக்கையிலே விபூஷணனுங்கண்டு செப்புவான்சாமியிடம்

அந்தாதெரிகிறவன் இலங்காபுரியாளும் அரசனவனென்தமயன்
எந்தாய்ஸ்ரீராமா தமது திருக்கண்ணால் ஏறிட்டுப்பாருமென

பக்கமிருந்தொரு சுக்ரீவனுமெழுந்து பாய்ந்தானிராவணன்மேல்
திக்கதிரவேமல்லுக் கட்டிமணிமுடியைத் திருகிப்பறித்தெழுந்து

தாவினான்சுவேலமலை பத்துமணிமுடியைச் சாமிபதம்வைத்திடவே
பாவிகிரீடமிதாம் கீர்த்தியிதுவென்றே பகர்ந்தான் விபூஷணனும்

இந்தவிதம்புகழ்ந்து வானரசன்பெருமை எடுத்தோதும் வேளையிலே
சுந்தரஸ்ரீராமர் சுக்ரீவனைப்பார்த்துச் சொல்லுவாரோர்வசனம்

போனதுபோகட்டுமினி வானரவீரர்கட்கு புகலுநீ இச்சமயம்
ஆனதுஆகட்டுமென்றே இலங்கைதனைச்சுற்றி அணிவகுப்பாய்நின்றிடவே

அஞ்சனாதேவிமகன் விஸ்வவுருக்கொண்டே அனுமனும்மேற்காகும்
நெஞ்சமஞ்சாதுபஞ்சாயப் பறக்கவரக்கர்குலம் நீலன் கிழக்காகும்

வாலிமகனங்கதற்கு மறவிபேரேற்க வாசலதுதெற்காகும்
நாலிலேவோர்வாசல் சாமியிட்டகட்டளையே நமக்கிதுவடக்காகும்

பகுத்தபதினேழுவெள்ளம் ஒவ்வொருவாசலுக்கும் படைத்தொகையுமீதாகும்
மிகுத்தஇருவெள்ளம் கனிகாய்கள்கொண்டுவர விட்டுவித்தோமாகையினால்

வாகுற்றவீரர்களே போர்முகத்திற் றங்களுட வல்லபத்தைக்காட்டிடுவீர்
காகுத்தன்கட்டளையை ஓர்மனதாயெல்லோரும் காக்கக்கடனிதுவே

என்றந்தசுக்ரீவன் வெள்ளமெழுபதுக்கும் இந்தவிதமியம்ப
அன்றந்தவானவரும் வாசலுக்குவாசல் அணிவகுத்துத்தானிருந்தார்

சார்த்தூதனோடிவந்து லங்காபுரிவேந்தே சரணஞ்சரணமையா
பார்த்தால்சிறுகுரங்கு பயமாயிருக்கிறது பட்டணத்தைச் சூழ்ந்ததுகாண்

கேட்டானிராவணனும் இந்திரசித்தைப்பார்த்து கிளம்புநீமேற்காகும்
தேட்டாம்பக்காவுடனே மகோதரா இருபேரும் தெற்குவாசலுக்காகும்

பேர்சொன்னாற்காலனுமே தலையெடுத்தும்பாரானே பிரகஸ்தாநீகிழக்கு
ஓர்நாழிகைக்குள்ளே நடக்குறேன் நானும் உத்திரதிசையதற்கு

ஒவ்வொருவருக்குமிரு நூறுவெள்ளம்கொண்டே உட்கோட்டை வாசலில்
செவ்விழியிலேயிமையுஞ்சேராமற்பட்டணத்தைத் திறமாகக்காத்திருப்பீர்

பதனம்பதனமடா நம்முடையதென்னிலங்கைப் பட்டணமுந்தான்பதனம்
மதனெறிகொள்ராவணனும் தாக்கீதுசெய்து விட்டுவந்தான் கொலுவதற்கு

ராகவர்க்குத்தூதுவன்யான் அங்கதனென்பேரெனவே லங்கைநகருட்புகுந்தான்
நர்கமெனவேசீறி வாலிமகனைவென்று ராவணனுமீதுரைப்பான்

தகப்பனைக்கொன்றவனும் அங்கதாயிங்கு தானனுப்பவந்தானோ
மிகப்பெரியோனானதினால் பழிக்குப்பழிவாங்காது மேன்மைபெறவந்தாயோ

கேளடாஎன்வார்த்தை சிறுபிள்ளைப்புத்தியினாற் கெருவங்கொள்ளாதபடி
மீளடாஎன்னிடமே கிட்கிந்தாமாநகரை மீட்டிமுடி சூட்டிடுவேன்

என்றுபலபலவாய் இராவணனுமங்கதற்கே இயம்பவெட் கொள்ளாமல்
நன்றிந்தப்படுபாவி யிணங்கிவாரானென்றே நவிலுவானோர்வசனம்

சீதைதனைச்சூதாகக் கொண்டதிருடாவுனக்கோர் சேதிசொல்லவந்தேனே
மாதைநீவிட்டுவிடு வீண்பழிக்காளாகாதே மரணம்வரும்தப்பாது

அங்கதனோராவணனை யிப்படிச்சொல்ல அடியும்பிடியுமென்றான்
கிங்கரர்கட்டிப்பிடிக்கத் தலைசிதறஉதறிவிட்டுக் கிளம்பிவந்தான் சாமியிடம்

தூதுபோய்வந்தேனே சுவாமிநமஸ்காரம் தூர்த்தனந்தராவணனும்
ஏதுவழிக்கும்வாரான் ஆதிரகுராமா யினித்தங்கள் சித்தமென்றான்

என்றவுடனங்கிருந்த வானரகுழாங்களெல்லாம் எழுந்தாரேவீரமுடன்
சென்றேஎதிர்த்தார்கள் அரக்கரைக் கொல்ல திரும்பிவந்துமொய்த்தார்கள்

கல்லுங்கருமலையும் கொல்லும்பெருமரமும் கைக்கொண்டுவானரர்கள்
வில்லும்வாளுங்கொண்டு வெட்டியரக்கர்களை மேல்கீழாய் விட்டெறிந்தார்

மேலுந்தோலும்பரித்து காலுந்தரித்துரத்த வெள்ளமாயோடிடவே
மேலுந்திசைநாலும் அரக்கர்முடிசிரங்கள் வீழ்ந்ததனேகங்கோடி

எடுத்தபிணங்குவிந்து கடலூர்ந்திடலாக எழுந்திரத்தப் பேராகும்
அடுத்தராட்சதப்போரும் வானரப்போரதனில் அலங்கோலமாச்சுதங்கே

வெட்டிமலைபிடிங்கி அரக்கர் தலைநசுங்க விட்டெறிந்தான் சுக்ரீவன்
எட்டுவஜ்ரமுடிதன்னை எமதூதர்கையில் இரையாகவே கொடுத்தான்

மேற்குத்திசையனுமான் தூன்முகன்சேனையுயிர் விட்டாரெனமாய்த்தான்
தாக்குமங்கதன்கையால் தெற்கிற்பாரீசன் தளத்தோடேமாண்டானே

நீலன் றன்கையாலே பிரகஸ்தன்கீழ்வாசல் நின்றபடைதான்மாள
கோலிடும்பன் குத்திடவே கும்பானுவென்பானுங் குடற்றள்ளிச் சாய்ந்ததுவை

அறிந்தானிராவணனும் ஆயிரம்பரித்தேரை அங்குவரக்கூடினனே
தெரிந்திரண்டாயிரம்பேர் சூழத்தேர்கொண்டுவர எதிரூன்லங்கேசன்

சீறியேஅம்புதொட அனுமானதைக்கண்டு சிலையெடுத்துவிட்டெறிய
எதிக்களம்புகுந்து சுக்ரீவன்சேனை யெல்லாம்மயங்கிவிழச்

கண்டானிராவணனும் விட்டமலையெல்லாங் கணையாற்பொடியாக்க
மண்டைசிதறிவிழ லங்கேசன்சாரதியை மாய்த்தானங்கோர்மலையாய்

மெய்யுங்கையுந்தளர அனுமானைத்தூறம்பால் வீரரக்கனுந்தெரித்தான்
அய்யர்க்கிளையவனுங் கண்டானிதை யரக்கர்படை மெய்நடுங்க

வளைத்தானிமைப்போதில் சரக்கூடத்தாலே வழியொன்றுந் தோணுமல்
இளைத்தாரரக்கரெல்லாம் கண்டோரம்பாலே இராவணனுந் தானலுத்தான்

தளராதிளையவனும் விளையாடக்கண்டரக்கன் சமர்த்தன்நீஎன்றவுடன்
களையாறியேயனுமான் குத்துக்குவாடாநீ கைத்தினவுதின்குதுபார்

என்மார்பிலெட்டானைக் கொம்பொடிந்ததென்றேநீ எங்கும்விதைவிதைத்தாய்
உன்பலமும்என்பலமும் குத்துக்குநீவாயிங் குள்ளவர்க்குத் தான்தெரிய

ஈசன்கயிலமலை ஊசிவேரோடேநீ எடுத்தெரிந்தாயென்றூயாம்
மீசையுள்ளஆண்பிள்ளை வீரமெல்லாமின்றைக்கே வெட்டவெளியாகுமடா

குத்துக்கெழுந்திரடா குலத்தைக்கெடுக்கவந்த கோடாலிக்காம்பேநீ
பத்துத்தலைப்பகட்டால் ஆளைமிரட்டாதே பார்ப்போமிருவர்கையும்

உதிபெருத்தாவதென்ன தூணுகுமோசற்றே ஒதுங்காதூசில்லடாநீ
சதியிதோஓங்கிவிட்டேன் வருகுதடாகுத்து தாங்கடாவென்றலவோ

ஓங்கியனுமானும் ராவணன்மேற்குத்த ஒருகுத்தாற்கீழ்விழுந்தான்
தாங்கிப்பின்போதெழுந்து அரக்கனவனைக்குத்தத் தரைமேலேதான்சாய

வேலொன்றைக்கைபிடித்து இலங்கைநகர்வாசன விட்டானிளையவன்மேல்
மாலொன்றூலேசாய்த்தான் இளையபெருமாளை மாருதியும்வந்தடுத்தான்

முடித்தேரிலங்கவதில் ராவணனுமன்று மூனைதொடுக்கவந்தானே
அடிதொழுதங்கேயனுமான் தோளின்மேலேற்றி அரக்கர்முன்கொண்டேக

சளைத்தானிராவணனும் சாமியின்மேலேழு சரத்தையே எவினன்போர்
விளைத்தான்கோதண்டமதை வளைத்தேழு பாணமங்கு விட்டறுத்தார்பூமிமுழு

துண்டவனுமைந்தம்பு ராவணன்மேற்றூவ ஒன்றன்பின்னொன்றூக
கண்டவனுமீரைந்தாய்க் காகுத்தன்மீது கணைதொடுத்துவிட்டானே

இந்தவிதமாக ராகவனும்ராவணனும் இருந்துபோராடிடவே
வந்திருந்தராட்சதர்கள் நாலுபுறம்நாலணியாய் வகுத்தபடைகளெல்லாம்

சுற்றிவளைத்தார்கள் ராமனுமப்போது சுரியம்புதானறிந்தே
உற்றாரெவ்வொருவருக்கும் ஒன்றுபத்துநூறாக ஊழிமலைபோல்விடுத்தார்

கரியரித்தேர் கூட்டமதைச்சேர்த்தேஅரக்கர்களைக் கால்யாடுதலையாடாய்
அரியக்களந்தூர்த்து அடங்காதரத்தவெள்ளம் ஆறாய்ப்பெருகிடவே

கருதுங்கடலிடத்தே உதிரம்பிரண்டோடக் கவந்தமதிற்கூத்தாடப்
பொருதுமந்தவேளையிலே தெரிந்தேயிராவணனும் போட்டானிரண்டுகணை

தோள்களழுந்திடவே சுவாமியதுதெரிந்தே தொடுத்தாரே பாணமது
நீள்பத்துக்கைவிரலையும் முறித்தேஅரைநொடியில் நின்றதொருசாரதியை

தலையறுத்தேமீண்டும் சார்ந்தபரித்தேர்கொடியுந் தரையோடே சாய்ந்ததுவே
நிலைகுலைந்துகீழ்குதித்து அரக்கனும் யோசனையாய் நின்றானே அப்போது

தலையிலோர்பாணமது பத்துமணிமுடியைத் தட்டிவிட்டுப்பாய்ந்ததுவே
இலையுதிர்ந்தவாறதுபோல் ராவணன்மணிமுடிகளீரைந்து தானுதிர

நகுலம்பிடித்துவிட்ட நாகமதுபோலே நடுநிங்கிநாக்குலர்ந்து
மகுடமுடியிழந்து உலையில்மெழுகாய்நின்று வாடிமனங்கொதிக்க

நின்றானிராவணனும் சுவாமியவனைப்பார்த்து நினைப்பென்னசொல்லாயோ
என்றாரதற்கு பத்துத்தலையிறங்கி யிருந்தானிலங்கேசன்

ஆதிமுதற்சண்டைக்கு வந்தாயேநீயும் அலங்கோலமாகினையே
ஏதினியுன்சம்மதமோ சரணம்புகுதலடா இதுநல்லவேளையென்றார்

போக்கிரிச்செய்கைவிடு யோக்கியத்துச்செய்கையெடு புகன்றேனுனக்காக
சீக்கிரமாகவேநீ சிறைக்குள்ளேவைத்தஅந்த சீதைதனைவிட்டுவிடு

நிலைக்குளேதேவர்களை நீயுமுன்போல்வைத்து நெருக்கமதுசெய்யாதே
மலைக்காதிராட்சியத்தை தம்பிதனக்கீந்து வழுத்துவதைக்கேட்டிருப்பாய்

பயப்படாதேவுன்னைக் கொல்லவில்லைநீயும் பகராதேபோனாக்கால்
செய்யப்படாதேயிழந்தாய் அரக்கரிருநூறுவெள்ளஞ் சேனைபோலாக்கிடுவேன்

பத்துவாயாச்சுதடா ராவணாவுன்றனுக்கு ஒத்தவாய்பேசாதோ
மெத்தவாயுள்ளவனே ஊமையோசொல்வாய்நீ சுத்தமாய்பேசாயோ

சம்மதியென்றவுட னரக்கனும்வாய்திறந்து தாரமொன்றுஞ் சொல்லாமல்
மெய்மதியாலரக்கன் நிலங்கீறியேயிருந்து வெறுங்கையாய்ப் போய்ச்சேர்ந்தான்

பாட்டனுக்குமுன்னாலே சமரிலேதான்பட்ட பாட்டதனைச்சொல்லிநின்றான்
தேட்டாளாகேட்டாயோ சீதைதனையிப்போதே சீதரான்பாற்போகவிடு

இதுவேசமயமென்றான் மகோதரனோடிவந்த இம்மதியேனார்தனக்கு
எதுவாகிலுமொன்றைப் பிடித்துச்சாதிப்பதல்லோ இராட்சதவீரமையா

நுளைக்குரங்கோடுசிறுவர்க்குமேநாம்பயந்தால் நோஞ்சலெனச் சொல்லாரோ
இளக்காரந்தனைக்கண்டா லேறியேமேய்ந்திடுவார் எங்குமுனையேயழிப்பார்

கும்புக்குரங்கென்றும் குட்டிமனிதரென்றுங் கூறுவாயோர்வசனம்
தம்பிக்குநீசொன்னால் கணத்திலவனும் சதைசதையாய்ப்பேர்த்தெரிவான்

சட்டிசட்டியாகவடி யிட்டிடுகண்ணம்போலே கண்பூளைசாடிடவே
கொட்டுவாயோடியங்கே மலைபோற்படுத்து குறட்டைவிட்டுத்தூங்குகின்ற

தனக்கிளையோனான கும்பகர்ணனை யெழுப்பிச் சண்டைக்குப்போவெனவே
வினைப்போகமானதினால் மனமும்வேறாகி விட்டுவிடவொட்டவில்லை

போதந்தனங்கல்வி உலகிலொருவருக்குப் பொன்றிவருங்காலமதில்
மாதர்மேல்வைக்குமனம் என்றேஒருகிழவி வழுத்தினலிங்கதுபோல்

வந்ததேவுந்தனுக்கும் இலங்காபுரியதற்கும் வாழ்வுகெடப்போகுதடா
எத்தனையுங்கெடுக்கக் கூடப்பிறந்தவனே எண்ணிவிட்டாயுன்மனதில்

ஊழ்வலியெப்படியோ யார்கண்டாரண்ணே உனக்கும்எனக்குமிப்போ
தாழ்வுவரச்செய்து என்பேச்சுப்பின்னலே தமக்குத்தெரியவரும்

இரங்கிமனதுவெம்பி கும்பகர்ணன்நீதி யெடுத்துறைக்கவேசீறி
குரங்கையும்மனிதரையும் பாதமதில்வீழ்ந்து கும்பிடுபோடாவெனவே

தம்பியதுபொறுமல் ஆயிரம்பேர்பூண்ட தடந்தேரின்மீதேறி
வெம்பரக்கர்படைசூழ இலங்கைநகர்விட்டு வெளிவந்தான் கும்பகர்ணன்

எம்பெருமானேதென்ன விபூஷணனுமப்போது இயம்புவானையாநான்
தம்பியெனக்குமூத்தோன் கும்பகர்ணனென்று சாற்றுவாரெல்லோரும்

ஞானமதிலேவெகுநாள் தவஞ்செய்தானிடத்திற் சூலமதைப்பெற்றுவொரு
காலிட்டலைகடலை எத்தினனிந்திரனைக் கையினற்குத்தினவன்

என்றேஅண்ணன்பெருமை விபூஷணனும் ராமனிடம்இயம்பவதற்கவரும்
இன்றேஅவன்மனதை தெரிந்துவாபோவெனவே எழுந்தான்திசைநோக்கி

அண்ணன்வரும்வழியிற் சென்றேவிபூஷணனும் அடிபணிந்துதெண்டனிட
கண்ணான தம்பியரே காகுத்தனையடுத்துக் கவலையற்றுப்போனவனே

ஏன்வந்தாஇங்கேநீ தம்பிவிபூஷணரே இயம்புவாயென்றவுடன்
நான்வந்தேன்ராமனிடம் என்னைப்போலே சேர்ந்துநீ வாழ்வையென்று

சொல்லிவரச்சொன்னூர்காண் உன்மனதெப்படியோ சொல்லுவாயென்றானே
நல்லதுசொல்லுகிறேன் நம்புந்தமையனெடு நானும்இறப்பதல்லால்

தம்பிநான்சரணமென்று அய்யனிடம்புகுதல் சரியல்லகண்டாயே
அம்பைப்போல்நீசுருக்காய் ஓடியேசேருவது அழகானகாரியங்காண்

மறுத்துவிட்டான் கும்பகர்ணன் தம்பியும்சுவாமியிடம் வழுத்தினனப்போது
வெறுத்துப்போர்செய்யுமென்றார் சுக்ரீவனுங்கேட்டு வீரருக்குச்சொன்னனே

கடலாமரக்கர்வெள்ளம் திரண்டணியாயக்கும்ப கர்ணனேடங்குவர
அடலாம்பெருங்கடல்போல் வானரவீரர்களும் அங்குவந்துசூழ்ந்தார்கள்

எங்கும்பரிக்கூட்டம் எங்கும்கரிக்கூட்டம் இராட்சதக்கூட்டமெங்கும்
எங்கெங்குவானரர்கள் எங்கெங்கும் பல்லூகம் எங்கெங்குமந்திரிகள்

சங்கோடுதாளங்கள் கொம்போடுமேளங்கள் சாகரம்போலேயிடிக்கும்
அங்கேகவிநெருங்கி கெர்ச்சனையோசெய்வ தண்டகடாகம்வெடிக்கும்

கும்பகர்ணன்படையும் சுக்ரீவன்றன்படையும் கூடியொருவர்க்கொருவர்
அம்பம்பெதிர்த்ததுபோல் இருவர்படையும் அமர்செய்யும்வேளையிலே

துன்பம்படும்படிக்கு கும்பகர்ணன்மீது சுக்ரீவனுஞ்சினந்து
பின்பக்கமேபாய்ந்து காதுமூக்குஞ்சேர்த்துப் பிச்சுக்கொண்டோடினனே

தங்கச்சிமூக்கதுபோல் தன்மூக்குமின்றுபழு தாகவேவெட்கமுடன்
சிங்கஞ்சினந்ததுபோல் சீறியேகும்பகர்ணன் ஸ்ரீராமன்முன்னலே

வந்தெதிர்த்தேவில்வளைத்து பதின்மூன்றுபானமதை வாரிச்சொரிந்திடவே
இரதரெகுராமன் கோதண்டபாண மெடுத்துத் தொடுத்திடவே

விக்ரமனும்கும்ப கர்ணனுமேராமன் மேலொருபத்தம்புதொ
கைக்கணையாலேசாமி கைவிற்கவசமதை கண்டித்தாரோர்கணையால்

மடித்தவாயோடும் கும்பகர்ணன்வேறே வாளும்பரிகொடுத்தான்
தொடுத்தேஇராகவனும் அவன் றன்வலக்கையைத் துணிந்துவிழவிடுத்தான்

விழுந்தவலக்கையதனை இடக்கையினுற்பிடித்து வானரங்களைச்சாட
அழுந்தஇடக்கையதனை ஸ்ரீராமமூர்த்தி அறுத்தெறிந்தாரப்போது

வழுவாதொருகணையால் கும்பகர்ணன்காலை மண்ணில்விழவெய்தார்
அழியஇடக்காலாலே குத்திக்கொண்டே அடிக்க அந்தக்காலுந் துணித்தார்

அண்ணன் றனைநினைத்து எழுந்திருக்காதபடி அழுதான்மனமேங்கி
திண்ணமற்றமுண்டமதாய்க் கீழேகிடந்துருளச் செய்துவிட்டாரந்நேரம்

சாமிநமஸ்காரமென்று கும்பகர்ணன்வணங்கிச் சாற்றுவானோர்வசனம்
பூமியிலிவ்வேளைவரம் தரவேணுமிப்போது யுண்ணியவானேசரணம்

தோளிழந்தோன் தாளிழந்தோன்யென் றெனைப்பங்கஞ் சொல்லாததற்குமுன்பு
வேளையுள்கையம்பால் அறுத்தேசிரமதனை வேலையிதில் வீழ்த்திடுவாய்

கேட்டபடிக்கருள்வாய் ஆதிரகுராமா கிருபைசெய்யவேண்டுமென
நாட்டமுடனப்படியே ஆதுகவென்று ராமபாணந்தொடுத்து

விட்டாரிராகவனும் சிரமதனைக்கொய்து வேலையிலேவீழ்த்திவிட
திட்டமாய்க்கும்பகர்ணன் மரணமடைந்தானெனவேசெப்பினர் தூதுவர்கள்

கிட்டிநின்றாரப்பொழுது கேட்டுமனம்வருந்திக் கிலேசமிகப்பட்டார்கள்
வெட்டிவிழுமரம்போல் வேந்தனுடல்பதறி விழுந்தானெழுந்திருந்தான்

இப்போதுனைப்பிரிந்து அப்பா அடா தம்பி எப்படிநான்பிழைப்பேன்
எப்போமுகம்பார்ப்பேன் எந்தவிதத்திலேதான் எப்பிறப்பில் நான்பார்ப்பேன்

அணியாயமாய்கரன் மா ரீசனரக்கர்முதலனைவோரையமிழந்தேன்
இனியாரைத்தஞ்சமென்பேன் என்னைத்தெருவில்விட்டு எங்குநீசென்றாயோ

என்றுதனியேபுலம்பி மாளிகையினுள்ளே இவனிருக்கும்வேளையிலே
அன்றரக்கரைச்சேர்த்துச் சதுரங்கசேனையொடு அதிகாயன்தானெழுந்தான்

மன்னனிவனாரெனவே முன்னாளிலேவிழுந்த மதுகையிடவாளிருவர்
என்னமதாகும்பகர்னன் கைடவனுமதிகாய னென்றான்விபூஷணனும்

ஒருத்தனும்மாவொழிந்தான் சுவாமியேமற்றொருவ னுற்றானிவ்வேளையென
திருத்தியிவனுக்குத் தம்பியேபோதுமெனச் செப்பினர் ஸ்ரீராமர்

செப்பஅங்கதன்தோளில் ஆரோகணித்துச் சென்றானிளையவனும்
அப்போகனகமணித் தேர்மீதிலேறி அதிகாயன் வந்தெதிர்த்தான்

வானரச்சேனைகளும் வல்லரக்கர்சேனைகளும் மலையுங்கடலும்போல்
யானைக்கூட்டங்குமுறி மலைபோல் வெகுவெகுவாய் அங்குவரக்கண்டேகி

விடவிடவென்றேயதிர அநுமார்மரம்பிடுங்கி விரிமுடிந்தயானைகளைச்
சடைகொண்டிலங்குமொரு இலுப்பையதனை தடிகொண்டடித்தாற்போல்

சிலயானையுங்கடியால் சிலயானையும்உதையால் சென்றதெமலோகமது
சிலயானையும்பிடியால் சிலயானையுமடியால் சிதறவடித்தாரே

கண்டானதிகாயன் கண்ணிற்பொறிபறக்கக் கனகமணித்தேரேறி
கொண்டானதையறிந்து இளையபெருமான்வாலி குமரன்தோளேறினனே

102157

எதிர்த்தாரிருபேரும் வில்லைவளைத்து எடுத்தார்களம்பதனை
கதித்தேவிடுத்திடவே இளையபெருமாளும் மதித்தேமுறித்திடவே
அனலாஸ்திரமெடுக்க அகற்கதனையேவிடுத்து அறுத்தானிளையோனும்
மனமாம்பிரமாஸ்திரத்தை ஏவ அதிகாயன் காலனூரேகினனே
மூர்க்கனதிகாயன் மடிந்தானெனவே மொழிந்தார்கள் தூதுவர்கள்
போக்கற்றராவணனும் கேட்டுமதிமயங்கி புலம்பித்தவித்தானே
தானியமாலையவள் தெரிந்துசபைதனிலே தலைவிரித்தேதானழுதாள்
சேனைதிரண்டுவரச் சேமத்தேரேறிச் சென்றானிந்திரசித்து
அடுத்தேஒருவெள்ளம் வானரவீரர்களை யதமாக்கக்கண்டனுமார்
எடுத்தேமலையதனை யரக்கர்மேல்விட்டெறிய இந்திரசித்தேபார்த்து
வில்லெடுக்கமாட்டாயோ கல்லெடுக்கவந்தாயோ வீரமிதுவோகுரங்கே
நல்லதிருக்கட்டு மொருநாழிகையிலுன்னை எமலோகஞ் சேர்ப்பேனென்றான்
சொல்லடா உன் அத்தை மூக்கையரிந்திருக்கு சொல்லவோவேணுமோதான்
கல்லெடுக்கயெல்லார்க்கும் விபூஷணனுமிப்போ கார்த்திருக்குறான்டாபோ
மந்திரத்திலேமாங்காய் விழுகாதடாபோடா மழைக்கோகுடை யிடிக்கோ
அந்தநாளுங்கள் ஊரைக்கொழுத்தியதோ ரனுமாரென் றறியாயோ
அம்பாலேகும்பகர்ணன் கண்டதுண்டமாக அடிமாண்டுபோனானே
வம்பாவுனைக்கொல்ல இளையபெருமாளும் வந்திருக்கிறார்போடா
என்றங்கனுமானும் இந்திரசித்துக் கெடுத்தோதக்கேட்டவனும்
கன்றவீரைநூறு அம்பாலனுமானைக் களைக்கவடித்தானே
வந்தெதிர்த்தானிந்திரசித்து கைவில்தனையெடுத்து வளைத்தானதைக்கண்டே
சிந்தைதெளிந்தனுமன் லட்சுமணனைத்தூக்கி சிங்கமபோற்கொண்டுவந்தான்
அரக்கனாயிரங்கோடி அம்பைமுன்பாகவெய்தான் அதைக்கண்டுலட்சுமணன்
துரத்தியாயிரங்கோடி அம்பைத்தொடுத்து தூர்த்தனம்பைத் தானொடித்தான்
அர்த்தசந்திரபாணமதை அரக்கனொருகோடி அப்போதெடுத்துவிட
அர்த்தசந்திரபாணமதை ஒருகோடியேவிடுத்தங் கறுத்தானிளையவனும்
வச்சிரமுகாஸ்திரத்தில் கோடிபாணந்தொடுத்து வல்லரக்கன்சொல்லியெய்ய
இக்ஷணமேபக்ஷணம்பண்ணென்றே இளையவனும் எடுத்துவிடுத்தடுத்தார்
அங்கேநெடுநேரம் அரக்கனும்இளையவனும் அம்பெடுத்துச்சண்டைசெய்ய
கங்குலில்இந்திரசித்து மறைந்துவிடாக கைவளர்ப்பாசந்தன்னால்
கண்டோர்மயங்கிவிழ இளையவரும்வானரரும் களத்திலேசாய்ந்தார்கள்
உண்டோவெனத்தேடி லட்சுமணனைக்காண ஓடிவந்தான் விபூஷணனும்
எண்ணாதுமெண்ணி இளையோனவதிகண் டிந்தவினைக்கென்னசெய்வேன்
கண்ணனராமனுக்கு அன்னலுரைத்திடவே களத்திலய்யன்வந்தானே
என்னதான்செய்வேனடா இந்தக்களம்படுக்க எண்ணியிருந்தாயோ
உன்னைப்பணிபாசங்கட்ட உன்பாதமென்தன் உளங்கட்ட வாடுவேனே
மண்ணுமுன்னாலேவரும் மனைவியுவருமென்று மனமகிழ்ந்தானிருந்தேன்
எண்ணினஎண்ணமெல்லாம் போச்சேஎதிரிகளுக் கிளக்காரமாச்சுதடா
பாராயோவென்றுருகும் வேளையிலேகெருட பகவானும் வந்தானே
தேராயோஸ்ரீராமா சிந்தைமகிழ்வாயென்று செப்புவான்போலாக

வட்டமிட்டரீன்கெருடன் மாசுணப்பாசமது மறைந்தோடிப்போனதுவே
சட்டமுடன்வானரரும் லட்சுமணனுமங்கே தாமெழுந்தாரப்போது

கண்டுநமஸ்கரித்து காகுத்தனைப்போற்றிக் கருடன்விடைகொண்டானே
விண்டனுப்பராவணனும் இரவிலரக்கர்களும் வேகமாய்ப்படையெடுத்தார்

அக்கினிகேதுமுதல் அனேகபடைவீரர் அக்கணமேவந்தார்கள்
சுக்ரீவன்குமுதன் மாருதிசாம்புவந்தன் தோமரங்கை கொண்டார்கள்

மரத்தாலே ·ாட்சதரும் வானரச்சேனைகளை தரையில்விழ முடித்தார்
கரத்தாலேவானரரும் அரக்கர்படைகளையும் மண்டையுருண்டோடவைத்து

சுக்ரீவனேடமர்செய் சூரியகேதுவைத்தான் துண்டந்துண்டமாய் முறித்தான்
பக்கமதிற்பாய்ந்து அங்கதனும்பெரிய பக்கனுயிர்பறித்தான்

தூமகண்ணன் றன்னையும் ராமதூதன் எம தூதனைப்போய்க்கொன்றனே
மாமுஷ்கரமுள்ள நீலன் மலகைகொண்டு மாலினிரைவென்றனே

இடபன்போய்ப்பொல்லா வச்சிரதந்தனையே எற்றிக்கழுத்தொடித்தான்
உடனேபனசனவன் பிசாசனைக்கண்டோடி உதைத்துமிதித்தடித்தான்

இளையோன் றனைமரித்தே யீரிரண்டுவெள்ளம் எதிர்த்தெழுந்தேநடக்க
கிளையும்போய்ச்சேனையும்போய் தரைமீதிலக்கினிகேதுவும் பட்டுக்கிடக்க

விரைவாகராயனைப்போய் அரக்கரிருமூன்று வெள்ளங்கவிந்தாரே
ஒருவாளியினலே யீசல்போக்குப்போலே உடனே அவித்தாரே

நாயும்நரியுங்கழுகும் பருந்துகளுமேவந்து நாலுதிக்கிலுங்குதிக்க
பேயும்பிசாசுகளும் காளியுடன்கூளி பிணங்களைத்தின்றேஉதிக்க

வில்லாலுங்கல்லாலும் அரக்கனிரண்டுபத்து வெள்ளமிறந்ததென்று
சொல்லவதைச்செவியில் ராவணேசுரனுக்கு சுட்டாப்போலேயிருக்க

தெரிந்தானிராவணனும் அழையுங்கோஇந்திர சித்தனையென்றவுடன்
அறிந்தானிரண்டாநாள் தேர்மீதிலேறி அமர்செய்யவந்தானே

இன்றுமனுவர்களை வென்றுபகைமுடிப்பே னென்றே சங்கந்தொடுத்து
துன்றுசமர்விளைக்கக் களத்திலேவந்து தோன்றினனிந்திரசித்தன்

யானைதேர்பரிகாலாள் திரண்டோர்முகமாக அங்குவந்து சேர்ந்தார்கள்
வானரவீரருடன் அரக்கரொருவர்க்கொருவர் வல்லமையைத்தான்பேசி

இருவர்படையுங்கலந்து அநேகநெடுநேரம் இளையாதுபோர்புரிய
மருவியகம்பனுடன் வலியவந்தசேனைகளை வாட்டினன்மாருதியும்

முன்வந்தகும்பகர்ணன் போட்டுவிட்டுப்போன முனைகொண்டதண்டதனை
என்புமுறிந்திடவே அகம்பனுடசேனைகள் எடுத்தடித்துக்கொண்டானே

என்றுசமர்விளைத்தே அனுமான்முதலோர் இளையவன்பாலடைந்தார்
அன்றுமகோதரனும் போர்புரியவேயிளையோன் அப்போதுதான்திகைத்தான்

வியனுஸ்திரமெனவே வேந்தன் மகனுமங்கு வெகுநேரஞ் சண்டைசெய்ய
அயனுஸ்திரமேக நாதன்விடத்தம்பி முதலானோர் படுத்துவிட்டார்
உலகமதையளந்தோன் உண்மையது வறிந்தே உலைவாய்மெழுகதுபோல்
சலனமிகவுருகி அப்பா அரசேஎன் தம்பியேலட்சுமணா
எப்படிநான் மறப்பேன் எப்போதுடன்பிறப்பேன் இனிஎன்மனந் துணியேன்
செப்படாஎன்தம்பி லட்சுமணாவென்று சிந்தைமிகக்கலங்கி
நொந்தாயாசம்பெறவே இளையோன்முகந்தன்னை நோக்கும்ஸ்ரீராகவன்முன்
அந்தோவுனக்குக்கவலையுண்டோ வென்றந்தரத்தி லண்டர்களெலாந்துதிக்க
அப்போவிபூஷணனும் சாம்பவனுமந்தனுக்கு அறைவான்சஞ்சீவிமலை
இப்போதுகொண்டுவந்தால் வானரசேனைமுத லெல்லோருந்தான்பிழைப்பார்
என்றாரிருபுயமுந் தூக்கியண்டகோளமட்டம் எட்டும்விஸ்வரூபமதோன்
நன்றாமினிமேல்நீங்கள் அஞ்சாதெனவனுமான் நான்போரேனெனப்பாய்ந்து
பாய்ந்தானிமயகிரி பாய்ந்தேமகூடம்விட்டுப் பாய்ந்தான்நிஷதகிரி
வாய்ந்ததங்கப்பெருமலையுங் கடந்துவெள்ளியங்கிரியில் வாமதேவனைப்பணிந்து
சென்றானகந்தனிலே சிதரனையுந்துதித்து திகையாதுவிண்மேலே
நின்றவனைக்கண்டு விடிந்துபோச்சென்றே நீலமலை போகையிலே
தெரியவுரைப்பாயெனவே நான்ராமதூதனடா சொல்லுங்களென்றவுடன்
மரியலதுசெய்ய அரியகாவலோர்கள் மனது துணிந்தனரே
பெரியசக்கரஞ்சுழன்று வந்துபோமட்டும்பெலத்தங்கிருக்கின்ற
அரியநவலோர்களையும் பின்னிட்டவரோடே அடித்துமுடிக்கியங்கே
அகலநீளத்துயரம் ஆயிரம்யோசனையாம் ஆழ்ந்துவேரோடியது
புகலவதுபோலாகும் ஒருகரத்தாற்சஞ்சீவிப் பொருப்பைப்பிடிங்கினதும்
திரும்பிவருகையிலே தூக்கிப்பந்தாடத் தீர்க்கமலவாசனையால்
துரும்புபோல்பிர்மாஸ் திரமதுகழன்றோடச் சுழற்றியே யங்கேவைத்தார்
இளையபெருமாளுடனே எழுபதுவெள்ளஞ்சேனை யெல்லாமெழுந்திடவே
களைத்திருந்தயாவருக்கும் உயிர்தாரைநீர்வார்த்து கார்த்துக்கொடுத்தாயே
இந்தவிதமேயனுமான் பெருமையதைப்பாராட்டி யிருக்கின்றவேளையிலே
வந்தவிதமறியாமல் வல்லரக்கனிந்திரசித்து மாயைசிலசெய்ததினால்
எல்லோருமயங்க உளவறிந்தேவிபூஷணனும் இயம்பராமன்தேரேறி
நல்லதுநீலட்சுமணா சொல்லக்கேளென்று நவிலுவாரோர்வசனம்
முதலிரண்டுமூன்றுநாள் இந்திரசித்தனவன் மோசம்படுத்தாமல்
அதமாகப்போர்செய்து நாலுவிதத்திலுங்கை அம்புக்கெதிரம்புவிடு
பிர்மாஸ்திரமெடுத்தால் சூலமும்சக்கரமும் பேசாதுவிட்டுவிடு
தர்மந்தானேநமக்குப் பிரமாணமென்றுகையிற் றந்தானம்புராத்துணி
இன்றுபிடித்தோங்கு இதுநல்லபாங்கென்றே இயம்பினாரப்போது
சென்றுமேஇந்திரசித்து தலையறுத்திக்கணமே கொண்டுவாயிக்ஷணமே
என்றவுடன்தம்பியரும் நல்லதெனவிருக்கையிலே எதிர்த்தானே இந்திரசித்து
நன்றுநம்யோடிவனும் நாலாநாட்சண்டைக்கு நாடிவந்தானெனவே

நிறையக்கணைதொடுத்தார் இரண்டுபேர் சரமாரிநெறநெறவென் றேசொரிந்தார்
பிறையைஅரவந்தொட்டு தரையில்விழுந்ததுபோல் பிடித்தவிற்கையோடுவிழ

அர்த்தசந்திரபாணம் ஐயன்தொடுத்தாற்போ லம்பைத்தொடுத்துவிட்டான்
தத்தியவன்தலையும் எத்திவிடுத்தாப்போல் தாரணியில் வீழ்ந்ததுவே

எல்லாக்கவிப்படையும் இளையபெருமாளும் எழுந்தார்களப்போது
வல்லரக்கனிந்திரசித்து சிரமதனைச்சாமிபதம் வைத்தானே அங்கதனும்

தொந்தவிபூஷணனை அய்யன்மகிழ்ந்திடவே தூதர்போய்ராவணர்க்கு
இந்தவிதமென்றுசொல்ல பந்தமெரித்தாற்போ லெண்ணிப்புலம்பினனே

களம்பார்க்கவேநடந்தான் அற்றுக்கிடக்குமிடக்கை வில்லுடன்கண்டானே
உளம்வாடியேயடுத்தான் சிரங்காணுதேதியங்கி உடம்பென்னுமுண்டமதை

கண்டானிராவணனும் கதறிப்பதறியங்கு கன்றிழந்தஆப்போலே
விண்டான்மகனேயிந்த அலங்கோலமேபார்க்க விதித்தாயோவெனவழுதான்

மாளிகையிற்கொண்டுசெல்ல மண்டோதரியும் மகன்மேல்விழுந்தேயிவ்
வேளைநீயெனைமறந்து அந்தரத்திலேமகனே விட்டாயோவென்றழுதாள்

தொடுத்துமண்டோதரியும் சொன்னதவன்செவியிற் சுறுக்கெனச்சுட்டிடவே
திடுக்கென்றுதானெழுந்து ராவணனுமப்போ சீதைதனைவெட்டவென்று

அடுத்தோர்மனங்கலங்க வாளுருவும்வேளையிலே அமைச்சன்மகோதரனும்
துடுக்காமோபெண்பாவம் நில்லுங்காணென்று சொல்லுவானோர்வசனம்

கெட்டகோபத்தாலே கேணிக்குள்ளேவிழுந்து சேதமுற்றேஆயினபின்
னிட்டுச்சந்தோஷம்வரக் கிணற்றிலிருந்து எழுப்பப்போமோதேகம்

நாளையேதான்கெலிப்பாய் விருதுபலமீண்டு நகருக்குவந்ததுமவ்
வேளையேமயலானால் பிறகுமேநீயும் வேணுமென்றால் காணுவையே

அருந்துணையாமந்திரியு மிந்தவிதம்சொல்ல அரக்கனும்வாள் விட்டெறிந்தான்
தெரிந்துசொல்வோமெனவே தூதர்களுமூலபலச் சேனைவருகுதென்றார்

சங்கன்சூரியகேது சம்புருதிக்கண்ணன் சமர்த்தனிடும்பன் நிகும்பன்
சிங்கன்ரணமஸ்தன் தேவாங்கதன்கும்பன் தீயகுருதிக்கண்ணன்

அஞ்சுமுகத்தோர்கள்சிலர் பத்துமுகத்தோர்கள்பலர் ஆகாயந்தொட்டுவர
கொஞ்சுபலவைந்நூறு ஆயிரஞ்சிரத்தோர்கள் கும்பனொடுகூடிவர

கராந்தகன்யாககேது யாளிபுலிகரடி ஞாளிமேலேறிவர
தராதலமெல்லாம்நடுங்க ஆயிரவெள்ளஞ்சேனை சமுத்திரம்போற்சூழ்ந்துவர

விரிந்தேஅரியாய்ப் போகட்டுமென்றே விளம்பினன்ராவணனும்
கரிந்தேவருகுமந்த மூலபலச்சேனைதனைக் கண்டார்கள் வானரங்கள்

சாம்பன்முதலானோர்கள் மூலபலங்கண்டஞ்சித் தாண்டிப்போனார்கடலை
நாம்போகலாமோசொல் லென்றங்கதன் தடுக்க நவிலுவார்வானரரும்

எங்களாலாகாதே மூலபலச்சேனைமுன் னெதிர்நிற்கப்போகாதே
அங்கதாவென்வர்மம் அகுதிதனைப்பிடித்துப் பகுதிக்கடிக்கிறாய்நீ

இந்திரசித்தம்பாலே பட்டபுண்ணாறியின்னம் இரத்தமோஊறவில்லை
சிந்தைகலங்குதையா கங்குகரைகாணு சேனைகளைப்பார்த்திடவே

உடல்பெருத்தராட்சதர்கள் கும்பகர்ணனைக்கூட உண்டேப்பமிட்டிடுவார்
கடல்மணலையோர்வேளை யெண்ணலாமிச்சேனை கணக்குக்கடங்காதே

ஆனதொருராவணற்கு தலைபத்திவர்களுக்கோ ராயிரமைந்நூறுதலை
போனவாலியுங்கால நேமியிவர்களுக்கோர் பூச்சிபோலாகுமடா

சிறுபிள்ளைப்புத்தியினால் அழைக்கிறா யென்செய்வோம் தெரியாதடாபோடா
மறுவார்த்தைபேசாதே அங்கதாவென்று வழுத்தினார் வானரரும்

சொன்னவுடனங்கதனுஞ் சூரனுக்கோமரணம் துரும்பென்றுசொல்லுவரே
என்னகாரியமெண்ணிச் சாம்புவரேநீரும் என்னிடத்தில்சொல்லவந்தீர்

சாலஞ்செய்தோடில் தடுப்பாரெவருமுண்டோ சமர்த்தரெனப்பேராமோ
நீலரக்கருங்கெடுவார் நில்லாதுவாருங்கள் நிலைகடந்துபாய்வாரோ

என்றங்கே அங்கதனும் சாம்பன்முதலோருக் கியம்ப வுடன்பட்டார்கள்
சென்றபடைதிரும்பக் கண்டுரகுவீரன் செப்புவார்யாவருக்கும்

பாதுகாப்பாற்றிடுவோம் வானரவீரர்களே படைத்துணையாய் நாம்வருவோம்
தீதுசெய்யும்மூலபலம் என்றுமயங்காதீர் திரணமெனச்சென்றெதிர்ப்பீர்

தம்பிமுதலானோரைக் கூடஅனுப்பிடவே சமுத்திரம்போற் சூழ்ந்தார்கள்
வம்பருக்குக்கோதண்டம் நாணேற்றிக்காதளவு வாங்கிச்சரமாரிபெய்தார்

எடுத்தானிந்திரவாணம் எரிவாணம் அரிவாணம் இடிவாணந்தன்னோடு
தொடுத்தார்சுந்திரவாணம் வருணவாயுவாணம் துலங்குமோகனாஸ்திரமும்

வகுத்தான்சரக்கூட்டம் வாளிக்கிரையாக வளைந்துபுயம்போகாமல்
தொடுத்துவிட்டுயிராகவனும் அங்குமிங்குமெங்கும் தோற்றினான்ராமனென

ஒன்றன்பின்னொன்றாக மந்திரந்தான்சொல்லி ஒருமுகூர்த்தந் தனிலேதான்
வென்றானிராகவன் அரக்கர்ஒருவர்க்கொருவர் வெட்டிக்கொண்டேயிறந்தார்

இந்தவிதமாக எண்ணிறந்தசேனைகளும் இறந்தாரெனக்கேட்டு
வந்தானிராவணனும் இளையபெருமாள்முன் வந்தெதிர்த்தானந்நேரம்

வானரவீரர்களும் வல்லரக்கர்சேனைகளும் மல்யுத்தஞ்செய்தார்கள்
கூனமரங்களையும் குன்றுமலைகளையுங் கொண்டுவந்து சாடினார்கள்

செருக்களத்திலேயரக்கன் இளையவன்மேலே சிலபாணந்தான்தொடுத்தான்
திரும்பஇலக்குமணன் அதற்குஅதையேவிடுத்துத்தெள்ளுதவிடாக்கிடவே

துரத்திப்பத்தம்பை அரக்கன்விடயிளையோன் தூளியெனச்செய்தானே
அரக்கனதுவறிந்து மோகனாஸ்திரமதனை அப்போதுதான்தெறிக்க

நாராயணாஸ்திரத்தை இளையபெருமாளும் நாணேற்றி விட்டிடவே
பாராய்மயன்வேலை என்றுவீபூடணன்மேல் பார்த்தரக்கன் தூண்டிடவே

அங்கதனோடனுமான் குறுக்கேவிழுந்து அதற்கெதிரே தாண்டிடவே
இங்கேவிடுமென்றே உரமுள்ளதன்மார்பி லிளையவனும் தாங்கினனே

அஞ்சியேவீபூடணனும் பயந்துமிகவாட அனுமானதைக்கண்டு
சஞ்சீவிகொண்டழைக்க வானரச்சேனைகளும் தம்பியுந்தான்பிழைக்க

அங்கேவிபூஷணனும் சாம்பன்சுக்ரீவன்முதல் யாவரையுமேயழைத்து
இங்கேபாரென்றவர்க்கு மூலபலப்படுகளத்தி னியல்பையெடுத்தோதுவனே

வேதண்டமாம்வீர கோதண்டஞ்செய்ததொரு வேடிக்கையாகுமிது
சூதண்டவந்ததொரு சேனைத்தலைவரிவர் சுக்ரீவனேபாரும்

அண்டர்பெருமாள்செய்த விந்தையதாகுமிந்த யானைப்போக்கைப்பாரும்
உண்டோராயிரங்கப்பல்போ லிரத்தவாரியிலே ஓடுந்தேரைப்பாரும்

அந்தரத்தவாரிக்குள் மதயானைக்கொம்புகளும் அந்திவனத்திலிளஞ்
சந்திரனைப்போலாக மிதந்துமிதந்தங்கே தளும்புவதைத்தான்பாரும்

வானரவீரர்கட்கு விபூஷணனுமன்று வளங்களத்திற் கட்டியபின்
ஞானமூர்த்திதன்னிடத்தில் எல்லோருமொன்றாக நாடிவந்துசேர்ந்தார்கள்

மூலபலம்மாண்டதெனத் தூதுவர்களோடி முடிமன்னன் தன்னிடத்தில்
காலபலனிதுவோராவணராஜேஸ்வரரே காலனூரேகினரே

என்றார்நம்பாதபடி உத்திரகோபுரத்தில் இவனோடிப்பார்க்கையிலே
கொன்றாரெனத்தெரிந்து ஸ்ரீராமன்மேல்வருத்தங் கொண்டானிராவணனும்

கண்டானேமாலியவன் ராமனுக்குநிகராகக் காசினியில்வேறுமுண்டோ
திண்டுமுண்டுபேசினையே ஸ்ரீராமர்தன்னிடத்தில் செல்லாதேஉன்காசு

பெண்டுகளிலங்கையிலே பெருத்தாருனக்குப் பின்படைக்குயார்வருவார்
சண்டைஉன்னாலாகாது செத்தவர்க்கெல்லாமெள்ளுந் தண்ணீரிறைபோடா

பாட்டனிந்தவாறுசொல்ல ராவணனும்கேட்டு பட்டணத்துட்தப்பியதைக்
கூடயிருந்தரக்கர் ஒருநூறுவெள்ளங் கொண்டுதேர்மீதேறி

வந்தான்வரும்வழியில் யானைகுதிரைகள்பின் வாங்கியேகால்பதற
அந்தோஅறுந்துகொடி மேலேபருந்துவிழ அவசகுனந்தான்பார்த்தே

எண்ணாமல்ராவணனும் களங்காணத்தேரேறி யிடும்பாகச்சென்றானே
கண்ணாயிரமுடையோன் விடுந்தேரிதாகையினால் கடுகநீமாதலியே

பூதலத்திலாதரவாய் ரகுராமர்தன்னைப் போற்றியித்தேரதற்குக்
காதலுறச்சாரதியாய் நீயேயிருந்து களத்திலிராவணனைச்

சம்மாரஞ்செய்யும்வரை துணையாகநீயும் சாரதியாய்த்தேர்நடத்தும்
இம்மாத்திரமுதவி மாதலியேசெய்திடுவா யென்றுமேதானியம்ப

நன்றென்றுமாதலியும் பிரமாதேர்நடத்தி ராமனிடங்கொண்டுவந்து
நின்றுநமஸ்கரித்து உலகளந்தமாயழகா நின்றாள்சரணமையா

இன்றுபிரமன்கொடுத்த இந்தரதத்திலெழுந்தருள வேணுமையா
என்றுபதம்பணிந்த மாதலிவேண்டுக்கே ஏறினார்தேர்மீதில்

எதிடராகவனுஞ் செல்லமகோதரனும் எழுந்தேயிவர்களையான்
நீறுசெய்வேன்நிமிடம் போர்க்குவிடைகொடென நிகழ்த்துவான் ராவணனும்

ஆனாலிளையவன்மேல் அம்புதொடுத்தே அமராடிவாருமெனப்
போனான்மகோதரனும் காகுத்தனைக்கண்டு போர்புரியவந்தெதிர்த்தான்

மாலியவான்ஜானகியை விடச்சொல்லவேசம் மதித்தராவணனையன்று
காலனைப்போலெந்நாளும் கழுவாய்கரைத்துக் கலகஞ்செய்தேதிரிந்த

மந்திரியும்நீதானோ வஞ்சகமகோதரனே வாவாவெனச்சொல்லி
சுந்தரமற்றேவிழுகக் கோதண்டநாணேற்றிக் கணையொன்றுதான்தொடுத்தார்

மார்பிலேஊடுருவிப் பாய்ந்துகலங்காத பெருவயிறுஞ்சரிந்திடவே
நேர்படைக்கோ ரம்புவிட்டு மகோதரனைக்கொன்று நெடுமாலாய்நின்றாரே

எதிரான்தேர்மேலே இராவணனும் இராமனோடெதிர்த்தான் புவிமீதில்
நூறுநூறாயிரமாய் அரக்கன்கணையெடுத்து நொடிக்குள்விடுத்திடவே

கோதண்டராமனுமே வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்தேசாத்தை
மூதண்டமாயொன்றின் பின்னாலொன்றாய்விடுத்து முடிகிப்போராடிடவே

அரக்கனுகாயமதில் நடத்தராமர்தேரும் அதக்குமேற்றுவியதைத்
தூரத்தஇடஞ்சுற்ற சுவாமிவலஞ்சுற்றித் தொடுத்தான்மாயாஸ்திரத்தை

கண்டாரிராகவனும் ஞானஸ்திரமெடுத்துக் கண்டிக்கராட்சதன்கைக்
கொண்டநாகாஸ்திரத்தைக் கருடாஸ்திரத்தாற் தொத்தவிட்டுத்தூளிசெய்து

திரும்பராவணன்நெஞ்சைத் தொளைத்தேஒற்றைச சிரமதைக்கொய்ததுவே
கரும்புத்துண்டானதுபோல் கரங்கால்சிரந்தோளைக் கண்டிக்கவப்போது

தறிபடுதோள்கரஞ்சிரமும் ராவணற்குப்பழையபடி சரியாய்முளைத்திடவே
முறிபடுங்கையாலெடுத்து மாதலிமார்பைக்கலக்கி முடுக்கராமன் தடுக்க

தரிக்கத்தலைதழைக்க கண்டேயிராகவர்க்குச் சளையாவிபூஷணனும்
விரிக்கவிபரமுறை தெரிந்தேபிர்மாஸ்திரத்தை விட்டாரவ்வேளையிலே

அங்கருமத்தில்வைத்த அமுதகலசமதில் அடிபட்டுடைந்திடவே
தங்காதிராவணனின் பத்துமணிமுடியும் தத்திவழுந்தேயுருள

அழிந்தானிராவணனென் றந்தரத்தில்வந்திருந்த அண்டர்புஷ்பமாரிபெய்தார்
ஒழிந்தானெனத்தெரிந்து விபூஷணனுங்கண்ணீர ஒழுகியழுதிடவே

மலைமேல்மலைவிழுந்து அருவிநீரோடும் வாறுபோலானதுவே
மலையாதெனச்சாம்பன் தேற்றத்தெளிததங்கு மாயனிடம்போய்ச்சேர

அரக்கர்களிலேசிலர் மண்டோதரியிடத்தில் அலறியேபோய்ச்சொன்னார்கள்
அரக்கருக்கரசேநீ என்னைத்தனியேவிட்டு அந்தரத்திற்போனீரோ

சீதைவிருப்பமதை யடக்கிமவுனமதாய்ச் செருக்களத்தேகித்திரையோ
எதைமாசொர்க்கத் திருக்குமடமாதருக்குள் ஏற்றபெண்பார்த்தீரோ

இந்தவிதம்புலம்பி அரக்கர்குலத்தோடு இருக்கின்றவேளையிலே
அந்தஅனுமானும் ஜானகியைக்கண்டு அடிவணங்கித்தெண்டனிட்டார்

நல்லதம்மாராமஜெயம்ராமஜெயம் நாடிசுபசோபனத்தை
சொல்லவந்தானேர்சுணையால் ராவணனுவிவிட்டுச சொர்க்கத்திற்கேகினனே

தேவர்முனிவர் சிறைநீக்கியேமுன்போல் செழிப்பாய்முன்னுலேபொல்லாப்
பாவியரக்கன் பயங்கரமும்போக்கிப் பதவிமிகக்கொண்டாரே

என்றுமாருதிகூற அன்னைஜானகியரும் எந்நாளும்வாழியென்றே
நன்றுபிறைமீட்டிவைப்பே னென்றவுரைபோலே நடத்தல்வைராக்கியமே

எனக்குநீயித்தேகம் தந்தாயுபசாரம் என்னநான்செய்திடுவேன்
உனக்குவரந்தந்தேன் பயப்படாதேயின்னம் உதவிநீயென்றேதான்

எழுந்தாளேபூங்கோதை இராமபத்திரனடியை இறைஞ்சிப்பதம்பணிந்து
கொழுந்துபோல்ஒழிஒங்கும் அக்கினிகுண்டமதில் குளித்தேயெழுந்தாளே

அக்கினிதேவனங்கே என்னையுஞ்சுட்டதிந்த அன்னைபத்தினிதன்மம்
திக்கினியாரெனக்கே உண்டோவெனராமர் திருவடியைத்தான்பணிந்தார்

அக்கினிதேவனையும் அன்னைஜானகியையும் ஆதரிப்பாரப்போது
திக்கெங்கும்போற்றச் சதுர்முகனுந் தோத்திரஞ்செய் யந்நாளில்

தேவரனுமதியால் தசரதச்சக்கரவர்த்திநேர் தாரைமேற்கொண்டுவந்து
ஆவலுடன்மக்களையும் மருமகளையும்பார்த்து ஆனந்தமாகவேதான்

விடைபெற்றெழுந்திடவே வசந்தனைக்கொண்டுவர விரைந்தேமனூர்புகுந்து
தடையிலாஎங்கெங்குந் தேடிக்காணாது சார்ந்தானிந்திரலோகம்

சிரமமிலாவைந்தாரு நீழலெங்குமேதேடி சிட்டுணவோடுரையாடி
பிரமலோகத்திலும்போய் காணுமலேசென்றம் பெருமான்வைகுந்தம்வரை

தாவியனுமான்பாய்ந்து வசந்தன்றனைப்பிடித்து சாமிமுன்கொண்டுவந்தான்
மேவியசீதையதற்கு லங்கையிலேபலர்பட்ட விந்தைபாரென்றுசொல்லி

சேதுதனையேகாட்டித் திரும்பிவரும்வழியிற் சிறந்ததலமகிமை
ஓதிவந்தேபார்த்து வாசராட்சிரமமதில் உண்டுகளிக்குமுன்னம்

அனுமான்றனையனுப்பி தம்பிபரதனுக்கு அயோத்திபோய்சசொல்லெனவே
உனைத்தேடிநான்வந்தேன் பரதாபொறுநீ ஒருநொடிக்குள் வந்திடுவார்

என்றனுமான்பரதனுக்கு நடந்தவரலாற்றை இராமாயணங்கூறி
இன்றேஇராகவனும் வந்தேஅருள்தருவா னென்றங்கிருந்தபடி

பாய்ந்தான்நிமிஷமதில் அநுமானுமன்று பரத்துவாசன்மடத்தில்
வாய்ந்தபோசனவேளை யிற்போயிராகவனை வணங்கினுன்பரதனையும்

பார்த்ததுங்கார்த்ததுஞ் சொன்னனப்போதென தய்யன்பகருவாரோர்வசனம்
பூர்த்தியாயெனதுமனங் குளிர்ந்ததுபோலின்று போசனமென்னேடுண்பாய்

அங்கேபிரமாஸ்திரத்தால் விழுந்ததம்பியும்பிழைக்க அருமருந்துநீதந்தாய்
இங்கே அக்கினிக்குழியில் விழுந்ததம்பியும்பிழைக்க என்வரவுசொல்லிவந்தாய்

சக்கரைப்பந்தலில் தேன்மாரிபெய்ததுபோல் சந்தோஷவார்த்தைகொண்ட
இக்கணமேஅனுமந்தா சமையத்தில்நீவந்தாய் இருந்துண்டெனவிரும்ப

செவ்வாய்மலரில்வைத்து அய்யனுமுண்டபின் திவ்வியபரிகலத்தை
பவ்வியவிபூஷணற்கும் சுக்ரீவன்றனக்கும் படைகள்தனக்கீய்ந்து

பாதியைக்கைக்கொண்டு அஞ்சனதேவிமகன் பரவசமாயுண்டபின்பு
ஆதிரகுராமரிடம் வாநதனுமானும்பணிய அயோத்திக்கனுப்பிவிட்டு

அண்டபிரான்பரத்து வரசராட்சிரமத்தில் அறைவான்முனிவருக்குச்
சண்டைவந்தவாறெனவே இலங்கையைவென்றகதை சாமியெடுத்துரைத்து

எங்களாலொன்றுமில்லை உங்களாலிந்தகன்ம மெல்லாமெனவுரைக்க
எங்களைத்தொட்டகன்மம் உங்களால்விட்டதென்றே எல்லாமுனிவர்களும்

ஆசிர்வதித்திடவே புஷ்பகவிமானத்தில் யாவருந்தானேறி
மாசிலாக்கங்கைநதிக் குகனுமுளமுருக வந்தானிராகவனும்

வந்துகுகனுடனே புஷ்பவிமானத்தேறி வந்தாரயோத்திநகர்
சந்தோஷமாயிந்தா வந்தாரெனவனுமான் தன்கரத்தாற்றூன்காட்ட

பலபேருடன்வசிஷ்டர் தாய்மார்களுங்கூடப் பார்த்தார்பரதனுமே
உலகிலோர்மிடியனுக்குக் கனகமலைகிடைத்த தொப்பாயுளமகிழ்ந்து

வணங்கிநின்ருன்பரதன் ராமனுசீர்வதித்து மாதாக்கள்மூவரையும்
இணங்கிவசிஷ்டகுரு தன்னையுந்தான்பணிய இவர்களுமாசீர்வதிக்க

பரதசத்துருக்கனுமே பின்புசீதாலட்சுமணரை பணிந்தார்களப்போது
சரதசுமந்திரனும் நகரலங்காரஞ்செய்யத் தம்பிபரதனுமே

தங்கநவரத்தினத்தால் அபிஷேகமண்டபத்தை சமைத்தானொருநொடியில்
சிங்காதனமீதிற் சீதாசமேதரென ஸ்ரீராமர்வீற்றிருந்தார்

பக்கமதிற்றம்பியர்கள் இருவர்சாமரம்போடப் பரதன்குடைபிடிக்க
மிக்ககுருவசிஷ்டர் தருமநிலையுரைத்து விரும்பிமகுடஞ்சூட்ட

மண்ணுயிரைத்தன்னுயிர்போல் மனதுட்கொளயிருடி மறையோர்கள் சீர்பாதம்
மன்னும்படிகொண்டு ஆதிரகுராமன் வையகத்தையாண்டிருந்தான்
பசுவும்புலியுமொரு துறையிற்றண்ணீருண்டு பகைநீங்கியேவாழ
இசையாறிலோர்கடமை கொடுத்துக்குடிகளுமே எங்குஞ்செழித்திடவே
பார்க்குளுறுந்துயரை நீக்கஇளவரசால் பரதனுக்குத்தானீந்து
எற்குஞ்சேனதிபதி யிலட்சுமணனுக்காக்கி யிளையசத்துருக்கனுக்கு
நீதிநிறைவேற ஞாயாதிபதிப்பட்டம் நீங்காமலேகொடுத்து
தீதிலாவோர்மனுப்போல்இகத்திலேஉள்ளாள் ஜீவாத்மாக்களும்பிழைக்க
செங்கோல்செலுத்துமய்யன் ஸ்ரீராகவமூர்த்தி திருவடியைநான்மறவேன்
எங்கோனிரவிகுலம் வாழிசீதாபிராமன் இளையர்மூவரும்வாழி
குருவசிஷ்டர்தான்வாழி மந்திரிசுமந்திரனும் குகன்விபூஷணனும்வாழி
திருவடிதாங்கனுமானும் சுக்ரீவன்வாழி திரிமூர்த்திதான்வாழி
சந்ததமும்தான்வருந்திப் படித்துத்துதிக்கும் தன்மையுளோர்மிகவாழி
சுந்தரமாயெல்லோரும் மாயனருளாலே சுகஜீவியாய்வாழி
புவியிலிதையச்சிலிட்டு விற்பனைசெய்து பூமியெங்கும்பரவ
அருளோங்கச்செய்நயத்தான் மனைவிமக்களோடு அனைவோருந்தான்வாழி

மாயாவதாரன் வர்ணிப்பு முற்றுப் பெற்றது.

உ

ஸ்ரீராமஜெயம்.

## மாயாவதாரன் தோத்திரம்.

(1) அரியெனு மெழுத்தி னாலே அவணியி லுதித்தேன் யானும்
அரியெனு மெழுத்தி னாலே அறிந்துன்னைத் தெரிந்து கொண்டேன்
அரியெனு மெழுத்தி னாலே அருளது பெற்றேன் மூர்த்தி
அரியெனு மெழுத்தி னாலே அடைவது முந்தன் பாதம்

(2) அஷ்டாட் சரமு மரியெழுத்தும் ஐம்பத்தொன்றாய் நின்றெழுத்தும்
எட்டாய் இரண்டாய் வட்ட மதாய் ஈரே ழுலகு மோரெழுத்தாய்
நட்டாய் முட்ட முடிபோக நடுவாய் நின்ற நாரணரே
விட்டாய் விட்ட குறைதீர்த்தேன் விந்த மலர்த்தாள் பெற்றேனே

(3) ஜானகி ராமா ராமா சாரங்க ராமா ராமா
மானக ரயோத்தி ராமா மாதவா வாசு தேவா
ஓம்நமோ ராமா ராமா ஓங்கிய துளசி நாமா
தானவா வுனது பாதம் சரணமே கண்டேன் கண்டேன்

(4) ஆயனே நந்த கோபா அச்சுதா பச்சை மாலே
மாயனே சமைய மிப்போ வந்துநீ காக்க வேண்டும்
தாயனே நெருப்பு வெள்ளம் சுளியெரிந் தோடக் கண்டேன்
நேயனே ஆரு தாண்ட நெடியவா துணை செய்வாயே

(5) நெருப்பா ருடைய வலுவேகம் நீயே யறிவாய் நானறியேன்
கருப்பா ரெனவே கனலதனைக் கையா லணைத்துக் கையார
திருப்பாக் கனலைப் புனலாக்கிச் செவ்வே வழியுந் திறந்துநல்ல
தருப்போ லுதவுங் கோபாலா சரணஞ் சரணஞ் சரணுமக்கே

(6) அனலா யெழுந்து வருந்தீயை அடியேன்கண்டு பயந்துநொந்து
புனலே கண்ணி லிருந்தொழுகப் புண்ணாய் நொந்து புலம்புகின்றேன்
கனலே புனலாய்க் கொண்டருளிக் கற்பித் தருள்வாய் கண்ணுதலே
எனலா யிரங்கி யடியார்முன் இனியவா நந்தகோபாலா

(7) அரிகரி ராமா வென்றால் அகன்றிடுங் கோடி பாவம்
அரிகரி ராமா வென்றால் அனேகமாம் பொருளுஞ் சேரும்
அரிகரி ராமா வென்றால் அறங்களு மிகுந்து வாழும்
அரிகரி ராமா வென்றால் அவர்கள் மெஞ் ஞானியாமே

முற்றிற்று.

102157

## பெரிய அழகர் வர்ணிப்பு.

அழகர் மகிமைகளையும் கோவில் விசேடங்களையும் மலை வளங்களையும் தீர்த்த விசேடங்களையும் மற்று விஷயங்களையும் பூறவுந் தெரிய வேண்டுமானல் பெரிய அழகர் வர்ணிப்புப் புத்தகத்தில் எல்லா விஷயமும் நன்கு விளங்கும். இதன் விலை அணு 0—8—0 இன்னு மற்ற அநேக புஸ்தகங்களும் வேண்டுவோர் நேரிலும் வீ பீ தபால் மூலமாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம். இப்படிக்கு.

குரு இராமசாமிக் கோன்.

புத்தகசாலை, புதுமண்டபம், மதுரை.

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ், வடக்குமாசிவீதி, மதுரை. காபி 2000. 53.

7B
11-64

## விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| பெரிய அழகர் வர்ணிப்பு | 0 | 8 | 0 |
| சிறிய அழகர் வர்ணிப்பு | 0 | 4 | 0 |
| பெரிய பாகவத வர்ணிப்பு | 0 | 12 | 0 |
| கிருஷ்ணவதாரன் வர்ணிப்பு | 0 | 3 | 0 |
| மாயாவதாரன் வர்ணிப்பு | 0 | 4 | 0 |
| தசாவதார வர்ணிப்பு | 0 | 4 | 0 |
| பாண்டி முனி வர்ணிப்பு | 0 | 2 | 0 |
| கோடாங்கி மாலை 1-வது பாகம் | 0 | 8 | 0 |
| டிை 2-வது பாகம் பனிரெண்டு ராசி மூத்துக்குறி சேர்ந்தது | 0 | 8 | 0 |
| வீமன் சண்டை வர்ணிப்பு | 0 | 2 | 0 |
| கிருஷ்ணன் தூதுக்கும்மி | 0 | 2 | 0 |
| இராமாயணக் கும்மி | 0 | 4 | 0 |
| ருது நூல் சாஸ்திரம் | 0—3—0 | | |
| கந்தரனுபூதி மூல மந்திர சக்கரத்துடன் | 0—8—0 | | |

மேற்கண்ட புத்தகங்களும் இன்னும் மற்ற வேண்டிய நினுசுகளும் நேரிலும் வீ பீ தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம் கியாட்லாக் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் அனுப்பக்கூடும். இப்படிக்கு.

குரு. இராமசாமிக் கோன்,

புத்தகசாலை, புதுமண்டபம் மதுரை.